Registered as a Newspaper

வெளிநிலைப் பல்கலைக் கழகக் கல்வி
B.A. டிசம்பர் 88
மீட்டல் வினாவிடை
அரசறிவியல்
- தமிழ் -
ஆரம்பம்: 3-8-88
புதன் 8:00 A.M
BECON
யாழ்ப்பாணம்.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/.

வெளிநிலைப் பல்கலைக் கழகக் கல்வி
B.A. டிசம்பர் 88
மீட்டல் வினாவிடை
பொருளியல்-வரதராஜன்
தமிழ் - குழந்தை
ஆரம்பம்: 3 - 8 - 88
புதன் - 8. 00 A. M
BECON
யாழ்ப்பாணம்.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ ஆடி மீ 16 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 16 ( 31 - 07 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 144

## வெலி ஓயாவில் 14 சிங்களவர் பலி!

வெலி ஓயாவில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் 14 சிங்களவர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

இலவங்கப் பட்டை சேகரிப்பதற்காகக் காட்டுக்குச் சென்ற பதினாறு சிங்களவர்களில் பதினான்கு பேரே இப்படிக் கொலை செய்யப்பட்டனர்.

காட்டுக்குள் திடீரென வந்த இனந்தெரியாத நபர்கள் பதினாறுபேரையும் பிடித்து மரங்களில் கட்டிவைத்து விட்டுக் கத்தியால் குத்தினராம். 14 பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்த மற்றைய இருவரும் தப்பிச் சென்று தகவல் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

திருகோணமலை, முல்லைத்தீவு, அனுராதபுரம் மாவட்டங்களின் எல்லையில் அமைந்திருக்கும் வெலி ஓயாவில் தற்போது சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## 511 ஜவான்கள் இதுவரை பலி!

இலங்கையில் உயிரிழந்த இந்திய அமைதிப் படையினரின் எண்ணிக்கை 511.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே. ஸி.பந்த் கடந்த வியாழன் லோக சபையில் இந்தத் தகவலை வெளியிட்டார்.

ஆயிரத்து அறுநூறு பேர் வரையில் காயமடைந்தனர். கடந்த மே மாதம் வரை இந்திய அமைதிப் படையினரைப் பராமரிக்க 98 கோடி ரூபாவை (இந்தியப் பணத்தில்) மத்திய அரசு செலவழித்து உள்ளது - இப்படி திரு பந்த் மேலும் தெரிவித்தார்.

## விடுதலைப் புலிகளுடன் இணக்கம்காணுவதற்கு இந்தியா முயலுகிறது

### அகில இந்திய வானொலி தகவல்

புதுடில்லி, ஜூலை 31

இலங்கையில் இயல்பு நிலைமையை மீண்டும் ஏற்படுத்துவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் உடன்பாடு ஒன்றைக் காணும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுவதாக புதுடில்லியில் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

-இவ்வாறு அகில இந்திய வானொலி வெள்ளி காலை அறிவித்தது.

விடுதலைப் புலிகள் இயக்கம் நிலைமையை உணர்ந்து, வன்முறையைக் கைவிட்டு ஜனநாயகப் பாதைக்கு வருவார்கள் என்று அந்த வட்டாரங்கள் நம்பிக்கையை வெளியிட்டன என்றும்—

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் உடன்பாடு ஒன்று விரைவிலேயே ஏற்பட்டுவிடும் என்று அந்த வட்டாரங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கின்றன என்றும் இந்திய வானொலி மேலும் தெரிவித்தது. (உ-எ)

### முச்சந்தி முரளி



உவர் காணிக்காரர் நாகுக்கா, வாழைத் தோட்டக் காரருக்கு கிண்டல் விடுகிறார் போலை......!

ஒப்பந்தம் ஓராண்டு பூர்த்தியான வேளையில்......

# தென் இலங்கையில் வன்முறை வெடித்தது

## 20 ஜே.வி.பியினர் உயிரிழப்பு! பொதுச் சொத்துகள் நாசம்!!

கொழும்பு, ஜூலை 31

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு பூர்த்தியான வெள்ளிக்கிழமையன்றும் அதை அடுத்து நேற்றும் தென் இலங்கையின் பல பகுதிகளிலும் வன்முறை வெடித்தது. மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) யைச் சேர்ந்த இருபது பேர் கொல்லப்பட்டனர். ஆங்காங்கே பல இடங்களில் பொதுச் சொத்துக்கள் பெருமளவில் நாசம் செய்யப்பட்டன. இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

தலைநகர் உட்பட தென்னிலங்கையின் முக்கிய பகுதிகள் அனைத்திலும் வழமையான செயற்பாடுகள் முடங்கின. ஹர்த்தால் நடவடிக்கைகள் முழு அளவில் மேற்கொள்ளப்பட்டன.

அரசாங்கத்தின் தீவிர பந்தோபஸ்து ஏற்பாடுகளுக்கு மத்தியிலும் மக்கள் விடுதலை முன்னணித் தீவிரவாதிகள் பல வன்செயல் சம்பவங்களில் ஈடுபட்டனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு ஓராண்டு வெள்ளியன்றுபூர்த்தியானது.

இந்த ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வெள்ளி, சனிக்கிழமைகளில் முழு அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி தென்னலங்கைத் தீவிரவாத இயக்கமான ஜே.வி.பி சிங்கள மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தது என்பதும்-

இவ்விரு நாட்களிலும் தென்னிலங்கையில் வன்

(8-ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கையில் 48 மணி நேர ஊரடங்கு

கொழும்பு, ஜூலை, 31

தென்னிலங்கையில் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் வெள்ளி காலை 6 மணிக்குப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிவரை தொடர்ந்து 48 மணிநேரம் அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டது.

நேற்று (சனிக்கிழமை) காலை 6 மணிவரை ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் என வெள்ளி காலையில் அறிவிக்கப்பட்டது.

எனினும் தென்னிலங்கையில்தொடர்ந்து வன்முறைகள் வெடித்ததையடுத்து ஊரடங்கு உத்தரவு மேலும் 24 மணி நேரத்துக்கு நீடிக்கப்பட்டது.

இதே வேளை இந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

31 - 7 - 1988
ஆடி - 16
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
09-03 முதல் 10-33 வரை
ராகுகாலம்:
04-33 முதல் 06 03 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## வீடுகளையும் வீதிகளையும் அமைப்பதனால் மட்டும் அமைதி வந்துவிடமாட்டாது

### காணி அமைச்சர் காமினி கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 30

சட்டடங்களையும் வீடுகளையும் வீதிகளையும் நிறுவுவதன் மூலம் நாட்டில் அமைதியை ஏற்படுத்தி விடமுடியாது.

கடந்த ஆண்டில் பாதுகாப்புக்காக மட்டும் அரசு ஆயிரத்து 300 கோடி ரூபாவைச் செலவிட்டது.

அதனைக் குறைக்கவே இந்தியாவுடன் நாம் அமைதி உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திட்டோம்.

காணி அமைச்சர் காமினி திஸநாயக்கா நேற்று மகாவலி நிலையத்தில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

40 ஆண்டுகளாக இருந்து வந்த பிரச்சினைகளுக்குக் குறுகிய காலத்தில் தீர்வு கண்டுவிட முடியாது.

ஒரு நாட்டின் இறைமையையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க ஏனைய நாடுகள் உதவிய பல சந்தர்ப்பங்களை நாம் மறந்து விடக்கூடாது.

-இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா மேலும் தெரிவித்தார்.

## போர் விமானங்களிடையே சிக்கித் தப்பிப் பிழைத்த பயணிகள் விமானம்!

ஒட்டாவா, ஜூலை 31

அமெரிக்காவின் இரண்டு போர் விமானங்களுக்கும், ரஷ்யாவின் இரண்டு குண்டு வீச்சு விமானங்களுக்கும் இடையில் சிக்கி மோதவிருந்த - கனடா நாட்டு பயணிகள் விமானம் ஒன்று தெய்வாதீனமாகத் தப்பியது

நடுவானில் உருத்தெரியாமல் அழிந்து போகவிருந்த இந்த டி. ஸி விமானத்தில், அவ்வேளையில் 250 பயணிகள் இருந்தனர்.

கனடாவின் விமானப் போக்குவரத்துப் பிரிவு இத் திடுக்கிடும் தகவலை வெளியிட்டது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

மேற்படி பயணிகள் விமானம் சர்வதேச விமான பாதை வழியே நியூபவுண்ட்லாந்து கரைப் பக்கமாகச் சென்றுகொண்டி

(8 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கில் வியாழன் மாலை முதல்

## காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 31

கடந்த வியாழக்கிழமை மாலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை யாழ். குடாநாட்டிலும் மற்றும் வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளிலும் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இன்று காலை சுமார் 60 மணி நேரத்தின் பின்னர் இந்த உத்தரவு தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை நண்பகல் அளவில் மேற்படி உத்தரவை இந்தியப்படையினர் விடுத்தனர்.

ஊரடங்கு உத்தரவு பற்றிய அறிவிப்பு ஒலிபெருக்கி பூட்டப்பட்ட வாகனங்கள் மூலம் ஆங்காங்கே விடுவிக்கப்பட்டது.

இலங்கை- இந்திய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு வெள்ளியுடன் ஓராண்டு பூர்த்தியடைந்தது. இதையொட்டி பெரும் தாக்குதல் ஏதும் நடத்தப்படலாம் என சந்தேகிக்கப்பட்டதை அடுத்தே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தினத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் முழு ஹர்த்தால் அனுஷ்டிக்கும்படி விடுதலைப் புலிகள் தமிழ்மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய அமைதிப் படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் தமிழகம் விஜயம்

சென்னை, ஜூலை. 30

பிரதமர் ராஜீவ் காந்தி எதிர்வரும் வியாழன் தமிழ் நாட்டுக்கு தனி விமானத்தில் வருகிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

செஞ்சி, திண்டிவனம், சிதம்பரம், சீர்காழி, விழுப்புரம், மயிலாடுதுறை, நன்னிலம், திருவாரூர், சிக்கல், நாகூர், வேளாங்கண்ணி, மன்னார்குடி, தஞ்சாவூர், சரூர் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்து பொதுக் கூட்டங்களில் பேசிவிட்டு, சனிக்கிழமை திருச்சியில் இருந்து புதுடில்லி திரும்புவார் என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## 3 சிங்களவர் காயம்

கொழும்பு, ஜூலை 31

வவுனியாவுக்கு அருகில் உள்ள சிங்களக் கிராமம் ஒன்றில் இனந்தெரியாத நபர்கள் வெள்ளியன்று நடத்திய தாக்குதலில் 3சிங்களவர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

வடக்கு, கிழக்கில்

## அசம்பாவித சம்பவம் ஏதும் நிகழவில்லை

### அமைதிப்படை குறிப்பில் தகவல்

நேற்றும், நேற்று முன்தினமும் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெரும் வன்முறைச் சம்பவங்களோ, குழப்பங்களோ நிகழவில்லை என்று இந்திய அமைதிப்படையின் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று மாலை சென்னையில் அமைதிப் படையின் சார்பில் விடுக்கப்பட்ட குறிப்பு ஒன்றிலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்பட்டதாக அக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (உ)

அமைதிப்படை நடவடிக்கைகளை ஆட்சேபித்து

## தமிழகத்தில் நடைபெற்ற பேரணி, பொதுக்கூட்டங்கள்

சென்னை, ஜூலை 30

இலங்கையில் இந்திய அமைதிப்படையின் நடவடிக்கைகளை ஆட்சேபித்து வெள்ளியன்று தமிழகத்தில் பல இடங்களிலும் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் மற்றும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகமும் திராவிடர் கழகமும் இவற்றைத் தனித்தனியாக ஒழுங்கு செய்திருந்தன

தி. மு. கவின் ஆர்ப்பாட்டப் பேரணி மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டது.

சென்னையில் நடத்த தி மு. க. பேரணிக்கு அதன் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தலைமை வகித்தார்.

ஈரோட்டில் பேராசிரியர் அன்பழகனும், நெல்லையில் நாஞ்சில் மனோகரனும், காஞ்சிபுரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் வி. என். சோமுவும் ஆர்ப்பாட்டப் பேரணி மற்றும் கண்டனப் பொதுக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தனர்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியானதை ஒட்டியே இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக தி. மு. க. வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

அடுத்த தேர்தலில் தெரிவாகும்

## புதிய ஜனாதிபதிக்கு ஆதரவு தர கோருகிறார் ஜே. ஆர்.

கொழும்பு, ஜூலை, 30

அடுத்த ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்தில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தெரிவாகும் புதிய ஜனாதிபதிக்கு மக்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கவேண்டும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா இத்தகவலை வெள்ளியன்று தெரிவித்தார்.

கண்டி பெரஹரா முடிவில் தியவதனே நிலமேயும், பஸநாயக்க நிலமேக்களும் ஜனாதிபதியை சந்தித்து பெரஹரா வெற்றிகரமாக நடத்தப்பட்ட செய்தியை அறிவித்தனர்.

அப்போதுதான் ஜனாதிபதி இதனைத் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்துக்கு........

கடந்த வியாழக்கிழமை மாலை முதல் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவினால் வெள்ளிக்கிழமையன்று 'உதயன்' நாளிதழும் சனிக்கிழமையன்று 'சஞ்சீவி' வார இதழும் வெளிவரவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.

—நிர்வாகத்தினர்—
உதயன் / சஞ்சீவி

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ROGMAN

பிரதான வீதி சங்கானை.

**89 A/L 90**

காலை 8-00 காலை 9-00

## பொருளியல்

S. வரதராஜன், B.A. (Hons)

ஆரம்பம்: 01 - 08 - 88 திங்கள்

(ஏனைய பாடங்கள் பிரபல்யமிக்க ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.)

**O/L88** DAY CLASS EVENING CLASS

ஆரம்பம்: 01 - 08 - 88 திங்கள்

[நவராஜாஸ் கல்விநிலையம் பெயர் மாற்றப்பட்டு கணித ஆசிரியர் நவராஜாவினால் நடாத்தப்படுகின்றது.] (5558)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
பேராசிரியர் ஆ. சதாசிவம்

தோற்றம்: 15-2-1926 மறைவு: 1-7-1988

அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்து எமது கவலையில்பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பிய அன்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**அந்தியேட்டிக் கிரியைகள்**

31-7-88 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
11, சின்சப்பா வீதி,
கொழும்பு—6.

(5559)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி மாணிக்கம் பொன்னம்மா

தோற்றம்: 1902 மறைவு: 11-08-1987

எங்கள் அன்புத் தெய்வமே, உங்கள் ஆத்ம சாந்திக்காக, இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.
''சித்ர கிரி''
சூராவத்தை, சுன்னாகம். (5556)

## 10-ஆவது நினைவஞ்சலி

பிறப்பு:- 14- 1- 1958

இறப்பு:- 1- 8- 1978



**சூ. குயின்ரன் தவராஜா (சிலன்)**

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 1- 8-88 திங்கட்கிழமை காலை 6- 15 மணியளவில் யாழ். புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

குடும்பத்தினர்
28/4 சின்னக்கடைவீதி,
யாழ்ப்பாணம். (5560)

# தலைவராக நான்கு தகுதிகள்

# பண்ருட்டி ராமச்சந்திரன் விளக்கம்

வேலூர் ஜூலை 30

அ. தி. மு. க. (ஜெ) அணியில் பிளவு ஏற்பட்ட பிறகு முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் வேலூரில் நடந்த ரோட்டரி கிளப் நிகழ்ச்சியில் முதல் முதலாக கலந்து கொண்டார்

புதிதாக வேலூர் தெற்கு ரோட்டரி கிளப் தலைவராகப்பதவி ஏற்றுள்ள பேராசிரியர் பரஞ்ஜோதி பதவி ஏற்பு விழா நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டு பேசியதாவது:-

இங்கே கூட என்ன நிகழ்ச்சி என்று வந்து பார்த்த போது, பழைய தலைவர் மாற்றப்பட்டு புதிய தலைவர் பதவி ஏற்கும் நிகழ்ச்சியாகவே உள்ளது. ''இங்கே கூட தலைவரை மாற்றும் விழாவுக்கா என்னை அழைக்க வேண்டும்'' என்று பார்த்தேன். பழையன கழிதலும், புதியன புகுதலும் தொன்றுதொட்டு வரும் எதார்த்தமான நிகழ்ச்சிகள் தான்.

இங்கு பேசிய முன்னாள் தலைவர் நான் கூட 3 தடவை தலைவராக இருந்துவிட்டேன். இனி மேலும் அந்த பதவியில் நானே தொடர்ந்து இருப்பது நல்லது அல்ல, நானும் ஒரு அரசியல் வாதி தான் அதனால் தான் தலைவர் பதவியில் நீடிப்பது என்பது பற்றி எனக்குத் தெரியும், எனவே புதிய தலைவருக்கு இடம் கொடுத்து விலகி விட்டேன் என்றார்.

அரசியலில் தலைவர்களை சாமானியமாக விரட்ட முடியாது. இது அரசியலில் பல ஆண்டுகளாக நீடித்து வருவதால் நான் கண்ட உண்மை.

தலைவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று நமது முன்னோர்கள் அழகாக சொல்லிச் சென்றுள்ளனர். ஒரு தலைவராக இருப்பவர் நான்கு அம்சங்களை கடைபிடித்து செயல்படுபவராகஇருக்க வேண்டும்

தலைவர் என்பவர் தன்னை சேர்ந்தவர்களை தவறு செய்தால் கூட அந்த தவறைபெரிதாகக் கருதாமல் அந்த தவறையும் தானே தாங்கிக்கொண்டு அவர்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டும்.

தன்னோடு ஒட்டியுள்ளவர்களுக்கும் ஒட்டாமல் இருப்பவர்களுக்கும் நாணம், துன்டம் வரும் போது வெட்கித் தலைகுனிய வேண்டும்

படை நடத்தி செல்லும் போது தானே தலைமை ஏற்று வழி நடத்திச் செல்லவேண்டும்.

நான்காவதாக தலைவர் என்பவர் தங்களுக்கு உரிய மரியாதையை தரும்அளவில்ஒழுக்கமாக இருக்கவேண்டும்.

இந்த நான்கு அம்சங்களையும் பெற்றிருந்தால் மட்டுமே தலைவராக விளங்கி மற்றவர்கள் நம்பும் வகையில் சிறந்து விளங்க முடியும்.

நமது தமிழ் மக்களிடையேஇருப்பது திறமை ஆனால் இல்லாதது ஒற்றுமை. ஒற்றுமை இல்லாததற்கு காரணம் நாம் ஒருவருக்கு ஒருவர் உதவும் தன்மையை இழந்தது தான். ஒருவருக்கொருவர் பகை மூட்டுதல் கோள்மூட்டுதல்என்பது இன்றைய தமிழ் நாட்டில் நடந்து வருகின்றது.

அண்ணாவிடம் சென்று அவன் ஒத்து வரமறுக்கிறான் என்று பலர் கூறுவார்கள். அப்போது அவர் அவன் ஒத்துவர மறுக்கிறான் என்றால் நீ ஏன் ஒத்துப் போகக் கூடாது என்று கேட்பார்.

நாம் தொண்டு செய்ய வந்துள்ளோம் தொண்டு செய்யும் நேரத்தில் ஒத்து வராவிட்டால் ஒத்துப் போக வேண்டும் அப்போது தான் நாம் எடுத்த முயற்சிக்கு பலன் கிடைக்கும்

இன்று நாட்டில் போடப்படும் திட்டங்கள் சாதாரண மக்களுக்கு பலனளிக்கவில்லை. அதனால் தான் ஆட்சிக்கு அண்ணா வந்த போது சாதாரண மக்களுக்கு பலன் கிடைக்க ''சீரணி'' என்ற ஓர் அமைப்பை உருவாக்கினார். அந்த சீரணியை இன்றுஜீரணித்து விட்டனர்.

ஒரு நாட்டில் இடைத்தரகர்கள் இருந்தால் அந்த நாடு முன்னேறாது என்று பொருளியல் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். அவர்கள் நமது நாட்டை பற்றி, ''நமது நாடு ஏன் முன்னேறவில்லை என்றால் இடைத்தரகர்கள் அதிகமாக இருப்பது தான்'' என்று கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஜப்பான் நாட்டின் முன்னேற்றத்திற்கு காரணம் அந்த நாட்டின் ஒற்றுமை தான். இன்று நமது நாட்டிற்கு புதிய சிந்தனைகள், புதிய எண்ணங்கள் புதிய வழிமுறைகள் தான்தேவை. ஆனால் நமது நாட்டிலுள்ள அறிஞர்கள் ஒதுங்கி விட்டார்கள். இவர்கள் நாட்டை அரசியல் வாதிகளிடம் ஒப்படைத்து விட்டு இவர்கள் விலகி ஒதுங்கி இருந்து கொண்டு அரசியல்வாதிகளை குறை கூறுவதில் அர்த்தம் கிடையாது.

இவ்வாறு பண்ருட்டி ராமச்சந்திரன் பேசினார். (எ-4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. ஆனந்தமணி செந்தில்நாதன்**

தோற்றம்: 26- 5- 1931 மறைவு: 11- 8- 1987

திதி: 31- 7- 1988

யாழ். ஆனைப்பந்தியைச் சார்ந்த முன்னாள் கௌரி மோட்டேர்ஸ், ஸ்ரேலிங் மோட்டேர்ஸ் உரிமையாளரும், கிங்ஸ்லி உதவி முகாமையாளரும்)

அன்பின் பிறப்பிடமாய் இருந்து எம்மை ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்று விட்டீரே! உம் பிரிவு எம்மை வருத்துகின்றது. உங்களது ஆத்மா சாந்தியடைவதாக.

31- 7- 88 அன்று அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் வந்து கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமகன், பேர்த்தி
235/7 பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம். (ஆனைப்பந்தி)

(5415)

## தமிழக மக்களுக்கு

# அரசியல் சட்டத்தை இலவசமாகப் போதிப்பேன்

## பாண்டியன் சொல்கிறார்

செய்யாறு, ஜூலை 30

தமிழ்நாடு முழுவதும் இலவசமாக அரசியல் சட்டம் சொல்லித்தரப் போவதாக சபாநாயகர் பி. எச். பாண்டியன் தெரிவித்தார்.

ஆரணி கொசப்பாளையம் தருமராஜா கோயில் திடலில் நடைபெற்ற அ. தி. மு க. பொதுக் கூட்டத்தில் பேசிய சபாநாயகர் பாண்டியன் இவ்வாறு கூறினார்.

சிறப்புரை ஆற்றிய பாண்டியன் பேசியதாவது:

காங்கிரஸ்காரர்களுக்கு அடிப்படை அரசியலே தெரியாது. தலைமைக் கழகம் முன் மறியல் செய்ததால் ஜெயலலிதாவிற்கு கட்டடத்தைக் கொடுத்தாராம் சப்-கலெக்டர் சத்தியமூர்த்தி பவனுக்கு முன்னால் சிவாஜி கணேசன் மறியல் செய்தால் அதையும் சப்-கலெக்டர் கொடுத்து விடுவாரா?

மக்களுக்கு அதிலும் மந்திரிகளுக்கு சட்ட ஞானமே இல்லை. தமிழகம் முழுவதும் இலவசமாக அரசியல் சட்டத்தைச் சொல்லித் தரப் போகிறேன்.

பத்திரிகைகளுக்கு ஒரு பக்க விளம்பரம் கொடுத்தால் யாரை வேண்டுமானாலும் இவர் தான் முதல்வர் என்று அடையாளம் காட்டி வருகிறார்கள் தமிழ் நாட்டில் மிக மலிவான விலையில் முதல்வர் பதவி விற்கப்படுகிறது

கூத்தா நல்லூருக்கு ஜெயலலிதா சென்று வருவது பற்றி குற்றப் பிரிவில் வழக்கு தொடரலாம். சாதாரண மக்கள் தவறு செய்தால் ஓடி வரும் போலீஸ் இதையும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது.

நான் நினைத்தால் மூப்பனார் முதல் யாரையும் உள்ளே வைக்க முடியும். மற்றவர் பயப்படும் செயலை நான் துணிந்து செய்வேன்.

என்னை எம். எல். ஏ. ஆக்கியது அ. தி. மு. க. சபாநாயகர் ஆக்கியது அ. தி. மு. க. அந்த கொடிக்கும் சின்னத்திற்கும் ஆபத்து ஏற்பட்டால் விடமாட்டேன்.

இவ்வாறு பாண்டியன் பேசினார்.

(எ-4)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**யாழ். நவீன சந்தையிலுள்ள இரும்புச் சுருக்குக் கேற்றுக்களைத் திருத்தி மீளப் பொருத்தும் வேலைக்கான**

# கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**அட்டவணை**

| இல. வேலை விவரம் | கேள்விப்பிணைப் பணம்மீளளிக்கப் படக்கூடியது. | கேள்விப்படிவக் சட்டணம்(மீளளிக்கப்படமுடியாதது) | ஒப்பந்த காரர்பதிவுத் தொகை. |
| --- | --- | --- | --- |
| 01. யாழ். நவீன சந்தையிலுள்ள இரும்புச் சுருக்குக் கேற்றுக்களை திருத்தி மீளப் பொருத்துதல். | 500/- | 150/- | 100,000/- |

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1988ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12.00 மணிவரை மேலேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறான கேள்விப் பிணைப்பணம், கேள்விப் படிவக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சி. வீ. கே. சிவஞானம்**

மாநகராட்சிமன்ற அலுவலகம், மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம், 28 - 07 - 1988. யாழ்ப்பாணம். (C-5982)

# விற்பனை

## சீ-நோர் வலைத்தொழிற்சாலை

குருநகர், யாழ்ப்பாணம்.

**எமது ஸ்தாபனத்தில் உள்ள வெற்றுத் தகரப்பீப்பாக்கள் (45 கலன்) தரம் குறைந்த வலைகளும் விற்பனைக்கு விடப்படவுள்ளது.**

இதனைக் கொள்வனவு செய்ய விரும்புவோர் அலுவலக நேரங்களில் (திங்கள்-வெள்ளி, காலை 8-00 மணி — 4-30 மணி வரை) பார்வையிட்டு தங்கள் கேள்வி விபரத்தை பதிவுத்தபால் மூலம் 22-8-88 திங்கட்கிழமை பி. ப 3-30 மணிக்கு முன்

பிரதிப் பொது முகாமையாளர்,
வலைத் தொழிற்சாலை,
சீ-நோர்,
யாழ்ப்பாணம்


என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கேள்விப்பத்திரங்கள் 22 8 88 அன்று பி. ப. 4-00 மணிக்குப் பிரித்துடைக்கப்படும். இதில் பங்குபற்ற விரும்புவோர் சமுகமளிக்கலாம். கோரப்படும் விலைகள் திருப்தியளிக்கப்படாத பட்சத்தில் கேள்விப் பத்திரம் நிராகரிப்பதற்கு நிர்வாகத்திற்கு உரிமையுண்டு.

விற்பனை அதிகாரி,
சீ-நோர்.

(5408)


புரோட்டீன் நிறைந்த
புரோட்டினெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டினெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்பொருட்களும் அடங்கியது.

புரோட்டினெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறும்

Pfizer

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## 1. Saudi Arabia: சவூதி அரேபியா:

### Saudi Operation & Maintenance Company Limited
S. O. M. C.

| | | |
|---|---|---|
| 1. Electrician | — | SR 600 |
| 2. Mechanic | — | SR 600 |
| 3. A/C. Technician | — | SR 700 |
| 4. Electrical Engineer | — | SR 2000 |
| 5. Plumber | — | SR 600 |
| 6. Drivers | — | SR 600 |
| 7. Masons | — | SR 600 |
| 8. Carpenters | — | SR 600 |
| 9. Eletronic Technician | — | SR 700 |
| 10. Telephone Technician | — | SR 600 |
| 11. Telephone Operator | — | SR 700 |
| 12. Power Plant Operator | — | SR 700 |
| 13. Power Plant Mechanic | — | SR 700 |
| 14. Power Plant Electrician | — | SR 700 |
| 15 Painter | — | SR 600 |
| 16. Welder | — | SR 600 |

### Saudi Arabia
Maintenance Workers

| | | |
|---|---|---|
| 1. Work Controler | — | 1100 = 100 |
| 2. Work Settuler | — | 1100 = 100 |
| 3. Material Controler | — | 800 = 100 |
| 4. Have Split Units Technician | — | 900 = 100 |
| 5. Appliance Technici n | — | 700 = 100 |
| 6. T. V. Repairman | — | 700 = 100 |
| 7. Carpenter / Locksmith | — | 600 = 100 |
| 8. Plumper | — | 600 = 100 |
| 9. Painter | — | 500 = 100 |
| 10. Jeniter | — | 300 = 100 |
| 11. H.I. Duty Driver | — | 600 = 100 |
| 12. Mechanic Helper | — | 400 = 100 |

**Age 21 — 47 Year**

நேர்முகப் பரீட்சைக்கு

10-8-88 கொழும்பு சென்று 20-8-88 க்குள் பிரயாணம் செய்யலாம்.

யாவரும் ஆங்கில அறிவு திறமையுடையவர்களாகவும், 4 வருட அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

## 2. Kuwait: குவைற்:

### United Shiping Company Cleaners
300 Vacancies - Salary 30 K.D

**Age 21 — 48 வரை**

1. A. C. மெக்கானிக் — 60 K.D.
2. மாபிள் கல்லுப்பதிப்போர் — 60 K.D.
3. பேணிச்சர் காப்பென்ரர் — 60 K.D.

WITH FOOD ALLOWANCE

**FLIGHT: 15-9-88 க்கு முன் பயணம்**

மேற்படி விபரம் அறிய உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**T.V. TRAVELS & TOURIST**

**BROWN ROAD, (Railway Station Front) KOKUVIL.**

(C # 52)


# மருதங்கேணி ராணுவ முகாம் தாளையடிக்கு இடமாற்றம்

## சந்தை மீண்டும் பழைய இடத்தில்

தாளையடி, ஜூலை 30

வடமராட்சி கிழக்கில் மருதங்கேணியில் இருந்த அமைதிப்படை முகாம் தாளையடிக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

கடந்த எட்டு மாதங்களாக முகாம் மருதங்கேணியிலேயே இருந்து வந்தது.

மருதங்கேணியில் உள்ள சந்தைக் கட்டடங்கள்; கடைகள் ஆகியவற்றிலேயே இம்முகாம் அமைந்திருந்தது.

இதனால் தாளையடி அரசினர் வைத்தியசாலைக்கு அண்மையில் மர நிழல்களுக்கு கீழேயே இது வரை காலமும் சந்தை கூடி வந்தது.

முகாம் மாற்றப்பட்டதை அடுத்து சந்தை பழைய கட்டிடத்திலேயே, இயங்குவதுடன் கடைகளும் மீண்டும் திறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம் வடமராட்சி கிழக்குப் பகுதி இராணுவத்தினால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தாளையடி, மருதங்கேணி: உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வண்ணாங்குளம், நித்தியவெட்டை ஆகிய கிராமங்களில் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கட்டைக்காடு, நித்திய வெட்டை, வண்ணாங்குளம் ஆகிய இடங்களில் உள்ள மணற் பிரதேசமான காடுகளில் டாங்கிகள் மூலம் மூலை முடுக்குகள் எல்லாம் இராணுவம் சல்லடை போட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டது.

இத்தேடுதல் நடவடிக்கையின்போது பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்டத்துக்கும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் எல்லையாக இருக்கின்ற சுண்டிக்குளத்திலுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியும் தேடுதலுக்கு உள்ளானது. (இ-144)

### 'பாஸ்' பெற பட்ட கஷ்டம்!

பலத்த கஷ்டத்தின் மத்தியிலும் வாகனங்களுக்கான பாஸ் பெறுவதற்காக பல நூற்றுக் கணக்கானவர்கள் முண்டியடித்துக் கொண்டு யாழ் செயலகத்தின் முன்னால் கடந்த செவ்வாய் கிழமை கியூவில் நின்றனர்

புதிய பாஸ்களைப் பெறுவதற்காகவும் கால அவகாசம் முடிவடைந்த பஸ்களை புதுப்பிப்பதற்காகவும் கடந்த நான்கு நாட்களின் பின் பல நூற்றுக்கணக்கானவர்கள் யாழ். செயலகத்தின் முன்னால் கூடினர்.

இவ்வாறு பாஸ் பெற வந்த பொது மக்களை அமைதிப்படையினர் வை. எம். சி. ஏ. கட்டிடத்தின் முன்னே நிற்கும்படி பணித்தனர். அதன் பின்பு செயலக வாசலில் 'கியூவில்' நிற்கும்படி பணித்தனர் அதன் பின்னர் பலத்த சோதனைகளின் பின் செயலகத்தின் உள்ளே செல்ல அனுமதித்தனர்.

பல மணி நேரத்தின் பின்னரே பாஸ் பெற்றுக் கொண்டு வீடு செல்ல முடிந்தது. (ஒ-5)

### 5 சிறுவருக்கு நிதி உதவி

காங்கேசன் துறை ஜூலை 30

வலி வடக்கில் கடந்த கால வன்செயல்களால் அநாதையான 5 சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் நிதியுதவி செய்ய முன்வந்துள்ளது.

அவர்களது கல்வி மற்றும் பராமரிப்பு செலவுகளுக்காக இந்நிதியுதவி வழங்கப்பட உள்ளது.

மாதாந்தம் தபால் நிலையம் ஊடாக இந்நிதியுதவி இச்சிறுவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் 18 வயது வரை இந் நிதியுதவி கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ- 98)

### பாராட்டு

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி சாரணியர் நடத்திய "மனிதன்" என்ற ஆக்க அரங்கக் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது குறித்து யாழ். மாவட்ட சாரணியர் பிரிவு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

யாழ். இந்து மகளிர் கல்லூரிசாரணியர் தலைவி திருமதி சி. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கலைவிழாவில் "புராதன மனிதன்" "இயற்கையும் மனிதனும்" என்ற ஆக்க-அரங்கக் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (இ-167)

### கதிர்காமத்தில் கொள்ளை!

செவ்வாய்யன்று திர்காமம் இ.போ.ச டிப்போவினுள்புகுந்த இனந்தெரியாதகோஷ்டியினர் அங்கு வைக்கப்பட்டிருந்த 2 லட்சத்து 78 ஆயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

தடுப்பு முகாம்கைதிகளின் குடும்பத்தவர்

# நிவாரணம் பெற ஆகஸ்ட் 1 ஆம் திகதிக்குமுன் விண்ணப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஸ்ரீ லங்கா தடுப்பு முகாம்களில் உள்ளவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பூஸா, வெலிக்கடை மற்றும் தடுப்பு முகாம்களில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் உழைப்பில் மட்டும் தங்கியிருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்குவதற்கு சில தொண்டர் ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன.

இந்த நிவாரண உதவியைப் பெற்றுக் கொள்ள விரும்பும் அத்தகைய குடும்பத்தினர் உடனடியாக ஆகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதையும் தடுப்புக்காவலில் உள்ளவரின் உழைப்பில் மட்டும் அவரது குடும்பம் தங்கியுள்ளது என்பதையும் உறுதிப்படுத்தும் ஆவணங்களை விண்ணப்பதாரர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வல்லனில் 2 வீடுகளில் கொள்ளை

புங்குடுதீவு கிழக்கு வல்லன் கிராமத்தில் இரு வீடுகளில் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

பல இலட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணம் என்பன சூறையாடப்பட்டுள்ளன. (இ-131)

### தெற்கில் 17 நாட்களில் 22 பேர் கொலை!

கொழும்பு, ஜூலை30

17 தினங்களில் 22பேர் தென் மாகாணத்தில் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த பத்தாம் திகதியில் இருந்து தென் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களும் இராணுவ இணைப்பதிகாரிகளின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. (ஒ-எ)

பதில் கவர்னர் தகவல் :

# நிதி நிறுவனங்களுக்கு மத்திய வங்கி உறுதுணை

## இரண்டுக்குப் பண உதவி

கொழும்பு, ஜூலை 30

நிதி நெருக்கடிக்குள்ளான இரண்டு பிரபல நடுத்தர நிதி நிறுவனங்களுக்கு மத்திய வங்கி கணிசமான அளவு நிதி வழங்கி உதவி செய்துள்ளது.

இத்தகவலை மத்திய வங்கியின் பதில் கவர்னர் திரு ஏ. எஸ். ஜெயவர்த்தன வெளியிட்டார்.

அவர்மேலும்சொன்னதாவது:-

நிதி நிறுவனங்களுக்கு உறுதுணையாக மத்திய வங்கி இருக்கிறது. நாட்டின் இரண்டாம் பட்ச நிதிச்சந்தையான நிதி நிறுவனங்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

பண வைப்பாளருக்கு நன்மைகள் கிடைப்பதற்குத் தடையாக இருந்த முட்டுக்கட்டையை மத்திய வங்கி நீக்கி விட்டது.

நல்ல நிதி நிலைமையுடன் திறமையான நிர்வாகத்துடன் கூடிய நிதி நிறுவனங்கள் பல உள்ளன.

அவற்றில் ஒன்றுக்குக் கஷ்டம் ஏற்பட்டால் அதனை அப்படியே சாலை ஓரத்தில் முற்றாக நாம் கைவிட்டுவிடப் போவதில்லை.

ஹோம் பிரன்ஸில் இருந்து அறிவு பூர்வமான யோசனைகளுக்காகக் காத்திருக்கின்றேன். வைப்பாளர் சங்கத்திடமிருந்து முறையான நிதி அறிக்கை ஒன்றை இனித்தான் நான் பார்க்க வேண்டும்.

காசில் பிரன்ஸ் சம்பந்தமாக இரண்டு விதமான யோசனைகள் வந்துள்ளன. ஒன்று நிர்வாகத்திடம் இருந்து வந்துள்ளது. மற்றதுமாற்று யோசனை வைப்பாளர் சங்கத்திடமிருந்து வந்துள்ளது. அடுத்த நடவடிக்கை பற்றி தீர்மானிக்கு முன்னர் இரு தரப்பினரின் கருத்துக்களையும் கவனிக்க வேண்டும் என்றார்.

# காயப்பட்டோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை30

யாழ். கண்டிவீதியிலுள்ள அகதிகள் புனர்வாழ்வு நிதியம் காயப்பட்டோருக்கும் செயற்கை உறுப்புக்கள் பொருத்தப்பட இருப்போருக்கும் முன்னுரிமை வழங்கும்.

நிதியத்தின் பதில் தனதிகாரி திரு. எல். ஆர். முத்தையா இதனைத் தெரிவித்தார்.

இதர காரணங்களுக்காக வழங்கப்படும் உதவிகள் தற்காலிகமாக இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனஎன்றும், ஏற்கனவே கிடைக்கப்பெற்ற சுமார் 1500 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு உதவிவழங்கப்பட்ட பின்னரே ஏனைய விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படுப என்றும் அவர் தெரிவித்தார். (இ 6)

# மாணவரைக் கண்காணிப்பது மூலம் பாடசாலைகளையும் பெற்றோர் வளர்க்க முடியும்

அச்சுவேலி, ஜூலை 30

மாணவர்களின் கல்வி முன்னேற்றம் ஒழுக்கக் கட்டுப்பாடு போன்ற விடயங்களில் பெற்றோர் கூடிய கவனம் எடுத்து கண்காணிக்க வேண்டும். பெற்றோர் அக்கறையுள்ளவர்களாக இருந்தால் பாடசாலையின் முன்னேற்றத்தையும் வளர்த்துச் செல்ல முடியும்.

புத்தூர் சொத்தணி அதிபர் திரு.என். கணேசபிள்ளை இப்படிக் கூறினார்.

ஆவரங்கால் மகாஜன வித்தியாலய இல்லமெய் வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திரு.க. கணேசபிள்ளை உரையாற்றினார்.

அவர் மேலும் பேசுகையில் "பெற்றோர் தமது பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலையின் வளர்ச்சியில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும். பெற்றோர் கவனம் செலுத்தும் பாடசாலைகள் வளர்ச்சி அடைந்து செல்வதை நாம் அவதானிக்க முடிகிறது.

"பிள்ளைகள் பாடசாலை நேரத்திலும் கூடிய அளவு நேரத்தை தமது யார் கல்வி நிலையங்களிலும் வீட்டிலும் கழிக்கின்றனர்".

'பாடசாலை நேரத்தில் பின்பற்றப்படும் கட்டுப்பாடுகள் ஒழுங்கு நெறிகள் பாடசாலைக்கு புறம்பான நேரத்தில் சீர்குலைந்துபோவதால்பெற்றோர் தமதுபிள்ளைகளின் செயற்பாடுகளை கண்காணித்து நெறிப்படுத்த வேண்டும்" என்றார்.

போட்டிகளில் பச்சை இல்லம் முதலாம் இடத்தையும் சிவப்பு இல்லம் இரண்டாம் இடத்தையும் மஞ்சள் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திரு. கணேசபிள்ளை வழங்கினார். (இ-11)


# ரிக்கனச் செலவில் லால் ரஸ்க்கர் எச்.டி. லொறி




அடித்தளம் ரூபா: 495,000/- முதற்கொண்டு.

புறஉடற கூடடை மரத்தால் அமைத்துத்தரும் வசதியும் உண்டு.

நிதியக் கடன்/குத்தகைக் கடன் வசதிகள் பற்றி எம்மிடம் விசாரிக்கவும்.

GPL

ரஸ்கர்: பலன் கருதிப் பலம் பொருந்தியது.

**லங்கா அசோக் லேலண்ட் லிமிட.**
38 - 40, எடவடஸ் லேன், டுபளிகேஷன் வீதி, கொழும்பு 3
(பொரத்தாலோக்க மாவத்தச் சந்தியருகில்) தொலைபேசி 502286.

லால் ஸ்பெயர் பார்ட்ஸ் சென்ரர்.
241, பஞ்சிகாவத்த ரோட், கொழும்பு 10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்னு டியூசன் சென்றர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**A/L 90**

பிரிவு 2

இவ்வாறு ஆரம்பம்

(8.00 am.)

**89 பிரிவு 3**

ஆரம்பமாகிவிட்டது

முக்கிய குறிப்பு:-

I. கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் ஒருங்கிணைந்து நடாத்தப்படுகின்றது.

II. மாணவர்கள் பிரிவு 2 க்கான அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும்.

(C/5837)



## பிரயாண ஒழுங்குகள்

SAUDI OPERATION & MAINTENANCE COMPANY LIMITED

S. O. M. C

| | | |
|---|---|---|
| 1. | Hospital Cleaners Male | 456 SR |
| 2. | Hospital Cleaners Females | 456 SR |
| 3. | University Cleaners Males | 456 SR |
| 4. | Masons | 600 SR |
| 5. | Carpenters | 600 SR |
| 6. | Drivers | 700 SR |
| 7. | A. C. Mechanics | 650 SR |
| 8. | Electricians | 650 SR |
| 9. | Plumbers | 650 SR |
| 10. | Mechanics | 650 SR |

AGE 21 — 49 வரை

Air Port Taxம், Medical Feesம்

அறவிடப்படமாட்டாது

முற்பணம் அறவிடப்படமாட்டாது.

பிரயாணம் செய்ய கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்டபின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச்சீட்டு திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

தலைமைக் காரியாலயம்:

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

கிளை 1. **கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
குப்பிளான் சந்தி,
குப்பிளான்.

கிளை 2. **கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
வன்னிச்சி கோவிலடி,
வல்வெட்டி.

(C 5969)


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
24-12-1950

உதிர்வு:
29-07-1983

அமரர்
கந்தையா
திருநாவுக்கரசு

வாழ்வின் நன்மலராய் நாளும் நமக்கு உற்ற துணையாய் நின்றிடுவீர் என நம்பி இருந்தோம். பாதிவழியினில் எம்மை விட்டுக் கடுகதியே அமரனடி நாடினீர். நாளும் உங்கள் நினைவில் நாம் இங்கு வாடுகிறோம்.

இங்ஙனம்

மனைவி, பிள்ளைகள் பெற்றோர், சகோதரர்.
சுன்னாகம். சகோதரிகள்,
கொக்குவில் கிழக்கு.

(5407)

# புதிய பல்கலைக்கழக மாணவர்

யாழ்ப்பாணம், ஜூலை 30

இவ்வருடத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு விசேஷ ஆங்கிலப் பயிற்சிவழங்கப்படவுள்ளது. அதற்காக ஆறு நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆறு பயிற்சி நிலையங்களிலும் கற்பதற்கு தெரிவான மாணவர் பட்டியல் உதயனில் தொடர்ந்து வெளியிடப்படும்.

## மானிப்பாய் இந்துவில் ஆங்கில பயிற்சி பெறுவோர் விவரம்

மானிப்பாய் இந்துக் கல்லூரி பயிற்சி நிலையத்தில் ஆங்கிலம் பயில இடம் ஒதுக்கப்பட்ட மாணவர் விவரம் வருமாறு:-

**கலை, வர்த்தகம்**

1. சி. அனுஷா மானிப்பாய், 2. பி. அருந்ததி மூளாய், 3. இ. கிருபாநிதி இளவாலை, 4. எஸ். என். குருபரன் மருதனுமடம், 5. வி. நிமலனி வட்டுக்கோட்டை 6. வி, பார்த்திபன் மானிப்பாய், 7. என். பத்மராணி ஆனைக்கோட்டை, 8. ஏ. இராசரெத்தினம் உடுவில் 9. என். சசிகலா வட்டுக்கோட்டை, 10. என். சண்முகராஜா பண்டத்தரிப்பு.

11. எஸ். சிவானந்தன், அராலி வடக்கு. 12. எஸ். டி. சுரேந்திரா, மானிப்பாய். 13. ஜி. சுதர்சினி, மானிப்பாய். 14 எஸ். உதயதாதி, மானிப்பாய். 15. எஸ். விசயராணி, அராலி தெற்கு. 16. ரி. ஹேயராத்திமலர் உடுவில். 17. எஸ். மார்செலா, மாதகல். 18. எம்.கே. பேதுருப்பிள்ளை உடுவில், 19. வி. ரி. சரோஜினிதேவி அராலி, தெற்கு. 20. வி. சிவகணேசன், தாவடி.

21 எஸ். ஜெயந்தகலா- வட்டுக்கோட்டை 22. வி. எஸ். கலைவாணி- பண்டத்தரிப்பு. 23. எஸ். ஜே. புஷ்பராஜ்- இளவாலை, 24. பி. ரஜனி வட்டுக்கோட்டை, 25. எஸ். ரவீந்திரன்- சண்டிலிப்பாய், 26. ரவிராஜா மானிப்பாய், 27. ஜே. சபாரத்தினம்- சுதுமலை, தெற்கு 28. ஏ. சடகோபன்- மனிப்பாய், 9, ஆர். சாந்தினி- தாவடி வடக்கு, 30. ரி. சுரேஸ்குமார்- நவாலி வடக்கு, 31. ரி. சுதர்ஜினி- உடுவில், 32. ஐ. வதனி- சங்கானை, 33. பி. விமலநாதன்- பண்ணாம்,

**விவசாயம்**

1. நந்திசுதாசர்மா— சுதுமலை மேற்கு, 2. எஸ். நிராநிதி — அராலி வடக்கு, 3. சி.இ.சிவேந்திரா சண்டிலிப்பாய் 4. எஸ். சுதாகர்— வட்டுக்கோட்டை.

**பொறியியல் —1**

1. கே. குலேந்திரன்— அராலிதெற்கு, 2. எம். நரேந்திரன் — மானிப்பாய், 3. எம் ரவிகுமார் — கட்டுடை, 4. எஸ். சுரேந்திரன் — அராலி தெற்கு.

**உயிரியல் விஞ்ஞானம்**

1. எஸ். காாததிகேசு —மானிப்பாய், 2 பி. கபிலன்—சண்டிலிப்பாய், 3. எஸ். சாந்தினி— சித்தங்கேணி, 4. கே. சியாமளா— சித்தங்கேணி.

**மருத்துவம்**

1. வை.ஆர்.சியாமின் —சுன்னாகம், 2. பி. திருமாறன்— சித்தங்கேணி, 3. ரி. கிருபானந்தராணி — இளவாலை, 4. எல். எம். இன்னுசிமுத்து — இளவாலை, 5. ஏ. கயல்விழி— சண்டிலிப்பாய், 6. ஜி.கிருஷ்ணபவானி— வட்டுக்கோட்டை.

**பௌதிக விஞ்ஞானம்**

1. சி. ரி. கே. அரியாசன் -சண்டிலிப்பாய், 2. எஸ். அருள்பிரகாசம் அரியாலை, 3. ஆர். கலையழகன் - மானிப்பாய், 4. ஆர். கல்யாணி-மானிப்பாய், 5. ஏ சி. கருணாகரன்- ஆனைக்கோட்டை 6. கே. சுரேந்திரதாசன் சண்டிலிப்பாய், 7. ஆர். மைக்கல்ஸ் - சண்டிலிப்பாய் 8, வி. பரமசாமி- மானிப்பாய் 9. ஏ.பேராயிரம் பிள்ளை - மானிப்பாய். 10. பி. ரவிச்சந்திரன் வட்டுக்கோட்டை,

11. எம். இ. ரவிந்திரராஜா - மானிப்பாய். 12. ரி ஏ. சாந்தினி- சித்தங்கேணி, 13. கே. ரி. சிவகுமார் - வட்டுக்கோட்டை, 14. எம்.எஸ். சிவானந்தன்- சுழிபுரம், 15. எஸ். சந்திரவதனி வட்டுக்கோட்டை, 16. எம். திருஞானசம்பத் மானிப்பாய், 17. எம். வாசுதேவன்- மானிப்பாய், 18. ரி. ஞானசுந்தரன்- கொக்குவில், 19. ரி. ஞானசம்பந்தன்- காரைநகர், 20. எஸ். நகுலேஸ்வரன்- காரைநகர்,

21. கே. செந்தில்வடிவேலு- காரைநகர், 22 பி. விஜயகுமாரன்- கரைநகர்.

**பல் வைத்தியம்**

1. பி. ரி திவாகரன்- வட்டுக்கோட்டை, 2. ஆர். விஜயா- வட்டுக்கோட்டை.

**அளவை மதிப்பீடு Quantity Surveying**

ஏ. ரி. திருச்செல்வம் காரைநகர்.

**மிருக வைத்தியத்துறை**

1 ஏ. நகுலேஸ்வரன் வட்டுக்கோட்டை

**சட்டத்துறை**

**மானிப்பாய் இந்து**

1. ரி.சக்கீலா-சுழிபுரம்

(தொடரும்)

## 93 ஆம் நாள் நினைவஞ்சலி



நெல்லியடிப் பிரதேசப் பொறுப்பாளர்
முருகேசு ஜெயக்குமார்
(கப்டன் மோகன் மாஸ்டர்)

தாய்க்குச் - சேயாக:- 03-05-62

ஈழத்தமிழர் விடிவிற்காக:- 27-04-88

—குடும்பத்தினர்

அம்மன் கோவிலடி,
கரணவாய் தெற்கு
கரவெட்டி.

(5293)

## 3ஆவது வருட நினைவஞ்சலி

திருமதி
எவஞ்சலின்
கனகம்மா
குலசிங்கம்



மண்ணில்:
02-03-1922

விண்ணில்:
29-07-1985

அன்பின் தீபமே! மம்மி! ஆண்டுகள் பல வாணுலும் உங்கள் நினைவு எங்கள் இதயங்களை விட்டகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
தினமும் பிரார்த்திக்கின்றோம்.

அன்புக்கணவன், பிள்ளைகள்,
அருமை மருமக்கள்,
ஆசைப் பேரப்பிள்ளைகள்.

'' நந்த பவான் ''
பண்டத்தரிப்பு.

(5074)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
30 - 12 - 1939

மறைவு:
29 - 7 - 1983

திரு. கதிரவேல் அருமை நாயகம்

கள்ளம் சிறிதுமில்லா
வெள்ளை மனத்துடனே
உள்ளம் திறந்தவர்க்கும்
உள்ள கதை பேசி
இன்னல் என வந்தவர்களுக்கு
உள்ள பொருளீந்து
மின்னலென மறைந்தீர்
எம்மை எல்லாம் விட்டு
எங்கோ மறைந்தீரோ
தங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்.

மனைவி, பிள்ளைகள,
(இந்திரன், சாதனி)
தாய், சகோதரன்,

கட்டுவன், தெற்கு,
ஏழாலை.

(5410)

## 'தேவைக்கு ஏற்பவே சமய போதனைகள்'

மானிப்பாய், ஜூலை 30

கடவுள் மனித குலத்துக்கான தனது திட்டத்தைச் சமய போதனைகள் என்னும் உருவில் பல்வேறு தீர்க்க தரிசிகள் மூலம் வெளிப்படுத்தி உள்ளார். மனிதனின் புரிந்து கொள்ளும் ஆற்றல், அவன் வாழும்சூழ்நிலை, தேவை இவற்றுக்கேற்பவே சமயப் போதனைகளும் மனிதனுக்கு அருளப்பட்டன.

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையில் நடைபெற்ற சமய வார விழாவில கலந்து கொண்டு உரையாற்றிய பஹாய் இயக்க தேசிய துணைவாரி நிலைய உறுப்பினர் திரு. கே. சி. சுவர்ணராஜா இவ்வாறு கூறினார்.

சமயவார விழாவுக்கு பாடசாலை அதிபர் திரு. இ. வல்லிபுரம் தலைமை வகித்தார்.

உள்ளூர் ஆத்மீக சபைப் பிரதிநிதி திரு. எம். மாதவரும் விழாவில் கலந்துகொண்டார்.

## தொடரும் ஷெல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

இராமநாதபுரம், வட்டக்கச்சி காட்டுப் பகுதிகளை நோக்கி புதனன்றும் இந்திய அமைதிப்படையினர் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

(ஓ-10)


## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
with GRAMMAR
by BRITTO

Day Classes

3ஆம் பிரிவு-ஆரம்பம்: 1-8-88
காலை 10 மணி

(C 5932)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்:
26-7-1961

அழிப்பவன் கையில்:
12-8 1984

திதி:
29-8-1988

செல்வன் நா. மோகனராசா
(கொழும்பான்)

எண்ணத்தில் நாம் வரைந்த
ஓவியமே மோகனராஜ்!
நாலாண்டு கடந்தனையே
நாம் பெற்ற செல்வமே - ஐயா!
வண்ணத்துப் பூச்சியாய்
எமைச் சுற்றி வந்தனையே!
கண்ணுக்குத் தெரியாமல்
காடையரின் வலையதற்கு
இலக்காகிப் போனீரே ஐயா!
அளவிலா அன்புதனை
அள்ளி அள்ளி வீசிவிட்டு
அரக்கனது கையினிலே
அகப்பட்டுக் கொண்டீரே ஐயா!
உமைப் பிரிந்து நாமெல்லாம்
உருகி மனம் வெடிக்கின்றோம்!
ஆறுதல் சொல்லுமையா எமக்கு
அமைதியைத் தந்திடய்யா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்.

நாகலிங்கம் [ஓய்வுபெற்றவர் அரசாங்க அச்சகம்]
தங்கரத்தினம் (பெற்றோர்) சுசிலாதேவி,
தேவராஜா(சுவிஸ்), சாந்தினிதேவி (சுவிஸ்)
றஞ்சினிதேவி, விஜேந்திரதேவி(சகோதரர்கள்)
சுஜிதா, றபீதா (மருமக்கள்)
சங்கர்தாஸ் (பெறாமகன்),
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

ஊரெழு கிழக்கு.
சுன்னாகம்.

(5291)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. P. குமாரசாமி
(O. A., Survey Dept )

தோற்றம்: 27-02-1909
மறைவு: 29-07-1986

வெண்ணிலவின் தண்ணொளியாய்
விரிகடலின் அலையொலியாய்
எண்ணரும் உம் நினைவலைகள்
எம்மிதயத் தெய்திடுமே
விண்ணுலகம் மேவியிரண்டாண்டு
நிறைவெய்திடினும்
கண்முன்னும் எம் கருத்தினிலும்
காட்சி நிழல் ஆடிடுமே.

பிரிவால் துயருறும்,

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்,

(5288)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. கு. பாலகுமார்
(கடற்படை உத்தியோகத்தர்)

தோற்றம்: 02-06-1951
மறைவு: 29-07-1984

ரஞ்சித்குமரன் தந்தாய் மைந்தா!!
வஞ்சித்தனருன் வாழ்வின் முடிவே
நஞ்சைப்போலெம் நெஞ்சைப் பிழியும்
நெஞ்சத்துயர் தான் நீங்கப்போமோ?
நீங்கா நினைவாய் நினைவிற் சுடராய்
பாங்காய் ஒளிர்வாய் பரமன் மகனும்
நான் காண்டாயிற் றுலகிற் பிரிவே
தாங்காதுளமே தரியா துயிரே.

தாங்கொணுத் துயரால் வாடும்,

மனைவி, மகன், அன்னை, சகோதரி,
சகோதரர்கள், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி ஏற்பட போர் நிறுத்தம் தவிர வேறு மார்க்கம் ஏதும் இல்லை

## இந்தியாவிடம் ஈரோஸ் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 30

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஓராண்டு முடிவடையும் இந்த வேளையில் இந்திய அரசு தனது போக்கை மாற்றி, தற்போது நடக்கும் மோதலைத் தனது கௌரவப் பிரச்சினையாகக் கருதாது, போரை நிறுத்திப் பேச்சு வார்த்தைக்கு இணங்க வேண்டும்.

ஈரோஸ் விடுத்த அறிக்கையில் மேற் கண்டவாறு கோரப்பட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு முடிவடையும் இந்தக் கட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் இதன் மூலம் அடைந்த நன்மைகள் என்னவென்று சிந்தித்து சீர்தூக்கிப்பார்க்க வேண்டிய அரசியல் கடப்பாடு எமக்குண்டு.

சென்ற வருடம் இதே நாட்களில் புதுடில்லியில் இந்த ஒப்பந்தம் பற்றி எம்மிடம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அப்பொழுதே நாம் தமக்கென உத்தரவாதமான ஒரு சுதந்திர வாழ்க்கையை நிர்ணயிக்கும் பாதுகாப்பான ஓர், அரசியல் வரையறுப்பே தமிழ் பேசும் மக்களின் நீண்டகால அடிப்படை எண்ண அபிலாஷை என்று வலியுறுத்தினோம்.

அதனை இந்த ஒப்பந்தம் கிரகிக்காமல் வெறுமனே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை என்பது அதிகாரப் பரவலாக்கம் எனவும், வெறும் மொழிப் பிரச்சினை எனவும், குறுக்கிப்பார்க்கிறது என்பதை சுட்டிக் காட்டியிருந்தோம்.

அதுமட்டுமன்றி தமிழ் பேசும் மக்களின் பிரிக்க முடியாத அங்கமான மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை முற்றாக ஒப்பந்தம் தட்டிக் கழிக்கிறது என்பதனையும், எப்பொழுதோ காலாவதியாகப் போன ஓர் ஒப்பந்தத்தின்படி மலையகமக்களை சட்டாயமாக நாடு கடத்த வழி வகுக்கிறது என்பதனையும் சிங்கள அரசு இந்த ஒப்பந்த அமுலாக்கத்தை தட்டிக் கழிக்கவே முயலும் என்பதனையும் மிகத் தெளிவாக - எதிர்ப்புக்குரலாக-முன்வைத்திருந்தோம்.

என்னும் இந்திய அரசின் பாதுகாப்புக்கு விரோதமாக ஸ்ரீலங்கா செயல்படுவதை தடுப்பதாலும் சிங்கள இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கி வைப்பதற்கு இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் இந்த ஒப்பந்த அமுலாக்கத்துக்கு தடையாகஇருக்க மாட்டோம் என்று கூறினோம். இது அன்றைய நிலை.

இன்று நடப்பது என்ன? ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவையே அமுல் நடத்தப்படாமல் -மீண்டும் போர் மேகங்கள் சூழ்ந்த - சட்டுப்பாடுகள் நிறைந்த- நாளாந்த வாழ்க்கையை திட்டமிட முடியாத-ஓர் அவமானசூழ்நிலையில்எம மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைக்காகப் போராடியவர்கள் இன்னும் வெஞ்சிறைகளில் உள்ளனர். மகாவலித் திட்டத்தின் கீழ் பறிபோன வெலிஓயா குடியேற்றங்கள் விஸ்தரிக்கப்படுவதோடு வன்னிப் பகுதிகளால் மகாவலி எல் திட்டம் என்ற போர்வையில் எம்மவர்களின் பாரம்பரிய நிலங்கள் பறிபோக வழிவகுக்கப்படுகின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஆயுதங்களைத் தூக்குகின்றோம் என்ற போர்வையில் இந்தியப்படை தொடுத்துள்ள போரானது அமைதி தேடிய மக்கள் வாழ்வில் இடிவிழுந்தது போலாயிற்று.

எம்மைப் பொறுத்த வரையில் மேற் குறிப்பிட்ட நிலைமைகளை ஓரளவுக்கு சீர்படுத்துவதற்கு போர் நிறுத்தத்தைத்தவிர வேறுமாற்று வழி இல்லை என்ற அடிப்படையில் செயல்பட்டு வந்துள்ளோம்.

இந்த எண்ண அபிலாஷையை மக்கள் எழுச்சி மூலம் பிரதிபலிக்ச் செய்துள்ளோம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழ்பேசும் மக்களின் நலன் உறுதி செய்யப்பட்டதாக இந்திய அரசு கூறுவது உண்மையாக இருந்தால்-எம் மக்களுக்கு உடனடியாக அமைதி தேவை என்பதனை இந்தியப் பிரதமர் நம்புகிறார் என்றால்- அமைதியையும் சுமுகமான சூழ்நிலையையும் கொண்டுவர போர் நிறுத்தம் தவிர்ந்த மாற்று வழி ஏதுமில்லை என்பதனை இந்திய அரசு திட்டவட்டமாக புரிந்து கொள்ள வேண்டும் என்பதை மிகத் தெளிவாக- உறுதிபட-இந்திய அரசுக்கு கூறிவைக்க விரும்புகிறோம்.

ஓராண்டு முடிவடையும் வேளையில் இந்திய அரசு தனது போக்கை மாற்றி தற்போது நடக்கும் மோதலை தனக்கு கௌரவப் பிரச்சினையாகவோ அல்லது தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்புக்குப் புறம்பாக நடக்கும் செயலாகவோ கருதாது, போரை நிறுத்தி விரைவான பேச்சு வார்த்தைமூலம் இணக்கமான முடிவுக்கு வருமாறு அனைத்து தமிழ் பேசும் மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### மருத்துவ பீடம்

பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து 1988 ஓகஸ்ட் 25 ஆம் திகதி வரை பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

(1) சட்ட மருத்துவத்தில் (Forensic Medicine) சிரேட்ட விரிவுரையாளர் / விரிவுரையாளர்

(2) உடற்றொழிலியல் / மருத்துவம் ஆகியவற்றில் தற்காலிக செய்முறை காட்டுநர்.

மேலே குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23 X 10 ச.மீ அளவுள்ள சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற கடித உறை அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

குறிப்பு: ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
25. 07. 1988 (C/5975)

CONSTRUCTION & DEVELOPMENT COMPANY LTD.
37, S. D. Jayasinghe Mawatte, NUGEGODA.

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு குவைத்

விவசாயப் பண்ணையில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை.

கொழும்பு முகவரினூல், நேரடியாக இங்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

3 போட்டோப் பிரதிகளுடன் தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு

03-08-88, 04-08-88

தினங்களில் நேரடியாகச் சமுகம் அளிக்கும்படி வேண்டப்படுகிறார்கள்.

சம்பளம்: 37 K.D. (1 K.D.—ரூபா 112)
ஒப்பந்தம்: 2 வருடங்கள்.

பிரயாண ஒழுங்குகள் இரு வாரங்களில் மேற்கொள்ளப்படலாம். பிரயாணக் கட்டணம் விசாவின் பின் அறவிடப்படும்.

தொடர்பு விலாசம்:-
No. 9, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(C 5974)

# தமிழர்களின் பாதுகாப்பு, கௌரவத்தை ஒப்பந்தம் உறுதி செய்யவில்லை

## விடுதலைப்புலிகள் அறிக்கை

இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஒரு வருட கால பூர்த்தியை முன்னிட்டு தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்த அறிக்கை.

வவுனியா, ஜூலை 30

எமது மக்கள் பாதுகாப்பாகவும் கௌரவத்துடனும் வாழ்வதற்கு இலங்கை - இந்திய ஒப்பந்தம் எவ்வகையிலும் உறுதி அளிக்கவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் வவுனியாவில் விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்ப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரமடைந்த காலம்தொடக்கம் ஈழத்தமிழ்இனத்தின் மீது பல்வேறுபட்ட வடிவங்களில் இனப்பாரபட்சம் காட்டப்பட்டு வருகின்றது. தமிழினத்தின் தனித்துவத்தைச் சீர்குலைத்து, இலங்கைத்தீவு முழுவதையும் சிங்கள மயமாக்கும் ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களின இனவிரோத நோக்கங்கள் தங்கு தடையின்றி அமுல் நடத்தப்பட்டன.

இத்தகைய இனப்பாரபட்சங்களிற்கு எதிராக அமைதி வழியில் குரல் எழுப்பிய தமிழ்மக்களின் குரல்வளைகள் நசிக்கப்பட்டன. சிங்கள மேலாதிக்கவாதத்தில் இருந்து எமது மக்களை விடுவிக்க தமிழ் இளைஞர்கள் போர்க்கருவிகளை ஏந்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

### மிதவாத போக்கு நிராகரிப்பு

இந்த நீண்டகால அரசியல் போராட்டத்தில் தமிழ் இளைஞர்களின் இன உணர்வுகளைக்கிளறிவிட்டு அதற்குள் குளிர் காய்ந்து கொண்டு, மறுபுறத்தில் சிங்கள அரசியல்வாதிகளுடன் கூடிக் குலாவி, விருந்துண்டு இரட்டைவேடம் பூண்ட தமிழ் மிதவாதத் தலைவர்களின சந்தர்ப்பவாதப்போக்குகள் தமிழ் மக்களால் இனங்காணப்பட்டு. அவர்களின் தலைமைகள் நிராகரிக்கப்பட்டன.

சிங்கள இராணுவம் துப்பாக்கிமுனையில் நடத்திய காட்டுத்தர்பார் ஆட்சியை, ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் மூலம், தமிழ் இளைஞர்கள் அடிமைத்தனத்துக்கு எதிராகப் போராடும்நம்பிக்கையை மக்களுக்கு ஊட்டினார்கள். இவ்வாறு தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய சக்தியாக எமது இயக்கம் மிளிரத் தொடங்கியது.

ஆரம்பத்திலிருந்தே இலங்கைத்தீவில் நிலவி வந்த அமெரிக்க சார்பு அலை இந்தியஉபகண்டத்துக்கு ஓர் அச்சத்தை ஏற்படுத்தியது. அத்துடன், இலங்கையைத் தன்னுடைய வல்லாதிக்கத்துக்குள் வைத்திருக்க வேண்டிய தேவையும் இந்தியாவுக்கு இருந்தது. எனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை [illegible] வைத்துக் கொண்டு, இலங்கைத் தீவினுள் தலையிட இந்தியா தீர்மானித்தது.

கட்டுப்பாடற்ற, கொள்கைத் தெளிவில்லாத ஆயுதக் கோஷ்டிகளை வளர்த்து விட்டு, அவற்றிற்கூடாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தனது கரத்தைப் புகுத்த முயன்றது. அத்துடன், இந்தக் கொள்கைத் தெளிவற்ற ஆயுதக் கும்பல்களைக் கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களை உண்டுபண்ணி, ஆயுத அராஜகங்களை வளர்த்து, ஆயுதப் போராட்டத்தின் மீது மக்களிற்கு வெறுப்பை உண்டுபண்ண எடுத்த முயற்சி தக்க தருணத்தில் அம்பலப்படுத்தப்பட்டு தமிழ் மக்களால் இனங்காணப்பட்டது.

### இந்திய தலையீடு

எனவே தனது மறைமுக சரங்கள் தகர்க்கப்பட்டதை அடுத்து எமது விடுதலைப் போராட்டத்தில் நேரடியாகத் தலையிட இந்தியா முடிவு செய்தது.

எமது இயக்கத் தலைவர் பேச்சு வார்த்தை என்ற போர்வையில் நயவஞ்சகமாக 'டில்லிக்கு' அழைக்கப்பட்டு. மிரட்டி, ஏற்கெனவே எழுதி முடிக்கப்பட்ட ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தத்தைஏற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். ஆனால் நாம் ஏற்றுக்கொள்ள மறுத்தோம்.

எத்தனையோ மகத்தான தியாகங்களுக்கு மத்தியில், எமது இரத்தத்தாலும், வியர்வையாலும் கட்டியெழுப்பிய எமது விடுதலைப் போராட்டத்தை, ஒரு நொடியில் கைவிடும்படி வற்புறுத்தப்பட்டோம்.

இதுவரை காலமும் இலங்கை இராணுவத்திடமிருந்தும், சிங்களக் காடையர்களிடம் இருந்தும் எமது மக்களைப்பாதுகாப்பதற்காக பெறுமதிமிக்க பல உயிர்களை விலைபாகக்கொடுத்து எடுத்த போர்க்கருவிகளைக் கீழே போடும்படி நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

ஒரு மிகப் பெரிய இராணுவ வல்லரசு திட்டமிட்டு விரித்த சதி வலைக்குள் தமிழீழ விடுதலைப் போராட்டம் சிக்கிக் கொள்ள நேர்ந்தது.

ஒரு சமாதானத்தின் தூதுவனாக உலக மக்களுக்குக் காட்டிக்கொண்டிருந்த இந்தியாவின் மேலாதிக்க வாதத்தின் முகமூடியைக்கிழித்தெறிந்து, அதன் உண்மைச் சொரூபத்தை உலக அரங்கில அம்பலப்படுத்த நாம் பொறுத்திருக்க வேண்டியிருந்தது.

அத்துடன் இந்தியா தொடர்பாக எமது மக்களுக்கு இருந்தமாயையை அகற்ற நாம் ஒரு சந்தர்ப்பத்தையும் [illegible] வேண்டிய தேவையும் இருந்தது. எனவே ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கு நாம் இணங்கினோம்.

### சிங்கள அரசின் திட்டமிட்ட குடியேற்றம்

நாம் நிராயுதபாணிகளானதை இந்திய அரசும், சிங்கள பேரினவாதிகளும் தமக்குச் சாதகமாகப் பாவிக்கத் தொடங்கினர்.

இராணுவப் பயிற்சியும் ஆயுத விநியோகமும் செய்து தாம் விரும்பியதைச் செய்விக்க வைத்திருந்த சமூக விரோதக் குழுக்களை மீண்டும் எமது இயக்கத்திற்கெதிராகவும், சுதந்திர தாகங் கொண்ட சாதாரண பிரஜைகளுக்கெதிராகவும் ஏவிவிட்டு உண்மையான புரட்சியாளர்களை அழித்தொழிக்கத் திட்டமிட்டது.

மறுபுறத்தில் இவைகள் அனைத்தையும்தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சிங்கள அரசு தனது திட்டமிட்ட குடியேற்றங்களையும், தொடர்ந்தும் தமிழின அழிப்பையும் தமிழர் பகுதிகளில் வெற்றிகரமாக நடத்தியது.

இவற்றிற்கெல்லாம் ஒரு முடிவு கட்டும்படி இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தோம்.

அலட்சியம் தான் விடையாகக் கிடைத்தது.

இத்தனைக்கும் [illegible] எமது தந்தையர் பூமிக்காக திலீபன் தன் உயிரைப் பணயம் வைத்தான். ஆனால் அகிம்சை அலட்சியம் செய்யப்பட்டு திலீபன் அமரத்துவம் எய்தினான்.

எமது மக்களைப் பாதுகாக்க என்று வந்தவர்களே எமது மக்களுக்கு கல்லறை கட்டினர். சமாதானத்தை நிலைநாட்ட டாங்கிகளுடனும், இயந்திரத் துப்பாக்கிகளுடனும் வந்ததன் அர்த்தத்தை மக்கள் புரிந்து கொண்டு விட்டார்கள். தமிழ்ப் பிரதேசம் முழுவதிலும் ஒரு புதிர் அவிழ்க்கப்பட்டு விட்டது.

எமது பிரதான தளபதிகள் உட்பட பதினேழு பேரை ஒப்பந்தச் சரத்துகளுக்கு முரணான முறையில் கைது செய்து, அவர்களின் மரணத்துக்கும் காரணமாய் இருந்ததோடல்லாமல், தமிழ்ப்பத்திரிகைக் காரியாலயங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. தொலைக்காட்சி நிலையம் அழிக்கப்பட்டது.

நீதிகேட்டுஇந்தியஇராணுவ முகாம்கள் தமிழ் மக்களால்சூழப்பட்டன. தனது உண்மைச் சொரூபத்தை மக்கள் இனங்கண்டு கொண்டார்கள் என்பதை சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிந்துகொண்ட இந்திய அரசு தனது இறுதி அஸ்திரமான இராணுவத்தைத் தமிழ் மக்கள் மீது ஏவியது.

தமிழ்ப் பிரதேசமெங்கும் இரத்த ஆறு ஓடியது. மனித குலமே வெட்கித் தலைகுனியும் அளவிற்கு இந்தியத் துருப்புக்களினால் மனித நேயம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது. சுதந்திரம், ஜனநாயகம் என்றெல்லாம் கொக்கரித்து திரிந்த இந்திய அரசின் பிதற்றல் ஜாலங்களை உலகம் புரிந்து கொண்டு விட்டது.

தமிழ் மக்களின் அங்கீகாரமில்லாமல் இலங்கை-இந்திய அரசுகளிடையில செய்துகொள்ளப்பட்ட இவ்வொப்பந்தமானது உலக மக்களிற்குக் காட்டப்பட்ட பூச்சாண்டியாகும்.

எமது மக்கள் பாதுகாப்பாகவும், கௌரவத்துடனும் வாழ்வதற்கு இவ்வொப்பந்தம் எந்த வகையிலும் உறுதி அளிக்கவில்லை. இது தமிழ் மக்கள்மீது திணிக்கப்பட்ட அடிமை சாசனம் என்றே கருதுகின்றோம்.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் மனங்களில் கொழுந்து விட்டெரியும் புரட்சித்தீயை எந்தவொரு இராணுவ வல்லரசுப் புயலாலும் அணைக்க முடியாது.

-இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

உ
யா / இராமநாதன் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம்-1988

இடம்:
இராமநாதன் கல்லூரி மண்டபம்

காலம்:
01.08.1988 திங்கட்கிழமை
முற்பகல் 10 மணி

தலைமை:
திருமதி S. S. குமாரசாமி அவர்கள்
(அதிபர்)

பெற்றோர், பழைய மாணவிகள் நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்.
(5414)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், அலுமாரி, கட்டில், மெத்தைகள், விருந்தைக் கதிரைகள், ஹோல்செற், Show Case, மேசை, கபேட், தையல் மெஷின், கண்ணுடி மேசை, சாப்பாட்டு மேசை, கதிரைகள், பழையயன்னல் நிலைகள், குழாய்க் கிணறு பம்ப், Baby Cot, மற்றும் பல பொருட்கள் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் சந்தியில்) (5136)

## டிரக்டர் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள X மொடல் டிரக்டரும் பெட்டியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். N. சிவானந்தன், 40, சாஸ்திரியார் லேன், அரியாலை. (5392)

## WALL PAPER FOR SALE

உயர்ந்த ரக இத்தாலிய நாட்டு (Italy) சுவருக்கு ஒட்டும் வர்ணகடதாசிகள் இரண்டு டிசைன்களில் விற்பனைக்குண்டு. கழுவிப்பாவிக்கக் கூடியவை. விபரங்கட்கு T. ஞானகுரு, 104/4, அத்தியடி குறுக்கு வீதி, அத்தியடி. யாழ்ப்பாணம். (C 5908)

## தேவை

யாழ்நகரில் தனியார் வீட்டில் வயோதிபப் பெண் ஒருவரை பராமரிப்பதற்கு ஒரு பெண் உதவியாளர் தேவை. காலை அல்லது மாலை நேரத்தில் சந்திக்கவும். J. V. துரைசிங்கம் 15, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (5404)

## WANTED

Vocational Training Instructor for Carpentry Part time/Full time. Call personally. United Engineers, Technical Training Institute for Rehabilitation. C/o Sai Saw Mills, 91, Ramanathan Road, Kaladdy, Jaffna. (5502)

## சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில்விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலக்குமி கடாட்சம், நோய்பிணி தீரல், சத்துருஜெயம், முதலான மாந்திரீக விடயங்களுக்கும் நாடுங்கள் 'சக்தி சரவணு' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய - பரம்பரை, மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ் / இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (C/5962)

## லிலியா வீடியோ ஓடியோ கிளப்

இல 2 நவீன சந்தை மேல்மாடி திருநெல்வேலியில் புதிதாக ஆரம்பித்து இருக்கும் எமது லிலியா வீடியோ, ஓடியோ ஸ்தாபனத்திற்கு வாடிக்கையாளர்களின் ஆதரவை நாடுகிறோம். அத்துடன் ஓடியோ, வீடியோ, சாதனங்கள் திருத்தியும் கொடுக்கப்படும். லிலியா வீடியோ ஓடியோ, No 2, நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலி, (5393)

## ஆண்டு 5

ஆண்டு 5 மாணவருக்கான முன்னோடிப் பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி 30-07-88 வரை நீடிக்கப்பட்டுள்ளது. பரீட்சை 1-08-88 காலை 9.00 மணிக்கு நடைபெறும். Modern Education Centre, Karaveddy. (5394)

## தவறிவிட்டது

23 - 07 - 88 அன்று எனது தேசிய அடையாள அட்டையும் அகதிகள் அடையாள அட்டையும் வேறு சில பத்திரங்களும் கச்சேரிக்கும் யாழ் நகருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். இ. தங்கவேல் (தங்கம்) 658 K.K.S. வீதி நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும். (5411)

## அடையாள அட்டையைக் காணவில்லை

சியாமளாதேவி நடராசா 285, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் ஆகிய எனது அடையாள அட்டை இல: 526040198 V கோப்பாய், யாழ்ப்பாணம் மினிவானில் ஆரியகுளம் சந்தியில் - முடிச்சு மாறிகளால் அபகரிக்கப்பட்டுள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேல் விலாசத்தில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படையுங்கள். நன்றி. (5508)

## தொழிலாளர் தேவை

யாழ்நகரில் இயங்கி வரும் பொறியியல் நிறுவனத்துக்கு பின்வரும் பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

- ✶ வார்ப்பு வேலை (வார்ப்பிரும்பு, பித்தளை, அலுமினியம்)
- ✶ கடைச்சல் வேலை
- ✶ ஒட்டுனர், பொருத்துனர்.

ஒவ்வொரு துறைகளிலும் சகல அனுபவமுள்ளோர்

9-8-88ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு முகவரி:

**யுனிரேக் பொறியியல் நிறுவனம்**
61, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்:
(5412)

## தேவை

எமது நிறுவனத்திற்கு தமிழ் ரைப்பிங் தெரிந்த பெண் லிகிதர் தேவை. தகுதியானோர் தகுந்த நற்சாட்சிப் பத்திரங்களுடன் 1 - 8 - 88 காலை 10-00 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

**அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்**
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(A. S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1-ஆம் மாடி)
(C 5979)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



**திரு. பேனுட் செல்வநாயகம்**
(சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர்)

இவர் 16-06-88-ல் கனடாவில் (Ontario) அகால மரணமாகி விட்டார். இவரது நல்லடக்கம் கனடாவில் 21-06-88 அன்று நடைபெற்றது.

இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
அம்மா,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்மார்,
உறவினர்கள், நண்பர்கள்.
குளங்கரை லேன், கொக்குவில். (5140)

## 1 -ஆவது நினைவு அஞ்சலி

செல்வன்

**செல்லத்துரை தயாகரன் (கருணு)**
(எழுதுமட்டுவாள்)

மலர்வு:- 25- 04- 1972 உதிர்வு:- 11- 08- 1987
திதி:-30- 7- 1988

விளையாடும் வயதுகளில் - தமிழர்
விதி மாற்ற நீ முனைந்தாய்
அணையாத ஜோதி - உன்னை
அணைத்துக் கொண்டான் இறைவன்.
உன் ஆத்ம சாந்திக்காக

அம்மா, அப்பா, சகோதர சகோதரிகள்,
மற்றும் உற்ருர், உறவினர், நண்பர்கள்
இறைவனை வேண்டுகின்ருேம்.

நாகர்கோயில் ரேட்,
எழுதுமட்டுவாள். (5297)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**ஜீன் காயித்திரி யோசவ்**

தோற்றம்: 20—12—1983 மறைவு: 30—6—1988

ஆனி 30ஆம் தேதியே ஏன் விடிந்தாய்!
எங்கள் குல விளக்கை அணைக்க அதிகாலை
திட்டமிட்டாயே!

அன்பே! எங்கள் செல்வமே! என்னென்று நாம் உம்மை மறப்பது. நீர் பாடிய பாட்டுகளும், பேசிய ஒவ்வொரு வசனமும் எமது செவிகளில் ஒலித்த வண்ணமே இருக்கிறது. உமது ஒவ்வொரு செயலும் உமக்கு இவ் உலகில் பெரும் வாழ்வு இருக்கிறதென்பதை எடுத்துக் காட்டியதே. பாலர் பாடசாலையில் எல்லோராலும் விரும்பப்பட்டு சிறந்த மாணவியென புகழப்பட்டதைக் கேட்டு எவ்வளவு சந்தோஷமடைந்தோம்.

மறக்க முடியாத உமது அகால மரணத்திலும் நீர், தேவ சந்நிதானத்திலிருந்து எமக்காகப் பரிந்து பேசுவீர் என்ற நம்பிக்கையில் வாழ்கிருேம்.

இப்பேரிழப்பின் போது எங்களுக்கு அளப்பரிய உதவிபுரிந்த சில்லாலை இளைஞர்கட்கும், "Solide Factory" யைச் சார்ந்த இளைஞர்கட்கும் மரணச் சடங்கில் பங்கு பற்றிய எல்லோருக்கும் நன்றிகூறி நிற்கும்,

காயத்திரியின்
பெற்றோர், சகோதரர், பேத்தி,
மா[illegible]
(5300)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

நல்லூர் கந்தசுவாமி கோவில் திருவிழாக் கால தற்காலிக சந்தைகளில்;

(1) நல்லூர் இந்துவிடுதிக்கு அருகாமையில்;

(2) பண்டாரமாளிகை வளவில் யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்திற்கு கிழக்குப் பக்கக் காணியில்-கடைகளுக்கான நிலம், ஐஸ்கிறீம் வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம்.

ஆகியன வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 10. 08. 88 ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12.00 மணிவரை யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள், கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா. 25/- ம், மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக ரூபா. 100/- ம் செலுத்துவதின் பேரில் 08 08. 88 ஆம்திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிவரை யாழ். மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் வழங்கப்படும் இணைப்படிவங்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 10. 08. 88 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் யாழ் மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ். மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

இக்கேள்வி சம்பந்தமான இதர விபரங்களை யாழ் மாநகராட்சி மன்ற அலுவலகத்தின் நானுவித வருமானப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சீ. வி. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 27. 07. 1988.
(C/5980)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**நாகநாதர் கந்தையா**
(வேலணை கிழக்கு 2 ஆம் வட்டாரம்)

மலர்வு: 5- 9- 1906 உதிர்வு: 30- 6- 1988

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
(5562)

## 90 ஆவது நாள் நினைவு அஞ்சலி

(30—7—88 சனிக்கிழமை அந்தியேட்டி)

மலர்வு: 29—03—1966



உதிர்வு: 02—04—1988

**செல்வன் கிருஷ்ணன் ரவீந்திரன்**

அன்னை மனம் அங்கலாய்க்க
அன்புச் சகோதரிகள் நோக
முன் பிறந்த சகோதரர் ஏங்க
எல்லோரும் முழு நினைவில் பரிதவிக்க
என்ன செய்வது என்றே
இளையவர்களும் ஏங்கிப் பரிதவிக்க
மின்னொளியாக மறைந்து விட்டாயோ
உன்னை இழந்து மூன்று மாதமாகியும்
கண்முன்னே நீ இருந்து பேசிச் சிரிக்கிருய்
இன்னும் எத்தனை மாதமாயினும்
உன்னைக் கண்டிட எம் மனம்
துடிக்குதே கண்ணீர் பெருகி

உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்ருேம்

இவ்வாறு கண்ணீர் விட்டுப் புலம்பியழும்
தாய், சகோதரிகள், மைத்துனர்,
மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்
[illegible]
(5561)

எமது புதிய வெளியீடு
✶ விஜயகாந் ✶ ராதிகா
நடித்த

# "பூந்தோட்ட காவல்காரன்"

(ஒறிஜினல பிரதி)

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/5981)

## S. P. அன்ரன்

மகிழ்ச்சியுடன் அறியத்தரும்

# வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

**கனடா, ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ், அமெரிக்கா**

இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது சிறு குழுக்கள் மூன்று கடந்த வாரம் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டன என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்ருேம். நிச்சயமான பயண ஒழுங்குகளைச் செய்து தருகின்ருேம்.

1. **சிங்கப்பூர் கப்பல் வேலைவாய்ப்புகள்:**

2. **கனடா: பணிப்பெண்கள்:**
கனடாவில் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு.

3. **சவூதி அரேபியா: (CATERING COMPANY)**
உணவுத் தொழிலகத்தில் பணி புரிய தொழிலாளர்கள் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தேவை.
அடிப்படைச் சம்பளம்: 450 S. R.
ஓவர்டைம் உத்தரவாதம்.
உணவு இருப்பிடம் இலவசம்.

4. **மாலைதீவு:**
மாலைதீவுத் துறைமுகத்தில் பணிபுரியத் தொழிலாளர்கள் தேவை.
அடிப்படைச் சம்பளம்:
75 அமெரிக்க டொலர்கள்
ஓவர்டைம் உண்டு.
உணவு, இருப்பிடம் இலவசம்

5. **சிங்கப்பூர்-கிறிஸ்-கனடா**
வீட்டுவேலைப் பணிப்பெண்கள்
ஓரளவு ஆங்கில அறிவுடைய பெண்களுக்கு மேற்படி மூன்று நாடுகளிலும் கண்ணியமான குடும்பங்களில் வீட்டு வேலை வாய்ப்பு

6. **சவூதி அரேபியா**
கிளீனேர்ஸ்
ஆஸ்பத்திரி-எயர்போட் கிளீனேர்ஸ்
உடன் தேவை S.R 400
விசா முதலிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும் சகல விவரங்களுக்கும் உடனே தொடர்பு கொள்ளும்படி
அன்புடன்
உங்கள் பயண அமைப்பாளர்

**S. P. அன்ரன்**
**வேல் றேட் சென்ரர்**
இல. 114, ஸ்ரான்லி வீதி,
(மக்கள் வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.
(C-5951)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு அபிவிருத்தி முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும்

காங்கேசன்துறை, ஜூலை 31

''கூட்டுறவுச் சங்கங்கள் பொருள்கள் விற்பனையில் மட்டும் கவனம் செலுத்தாமல் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும். இந்த வகையில் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் முன்மாதிரியாக திகழ்வது பாராட்டுதற்குரியது''

தெல்லிப்பழை ப.நோ. கூ. சங்க பாலர் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன தொழில் முகாமையாளர் திரு. எஸ். ஜெயக்குமார் மேற்கண்டவாறு கூறினார்.

மகளிர் குழுத் தலைவி திருமதி. சகிதேவி சந்தையா தலைமையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடந்த இம் மெய்வல்லுனர் போட்டியில் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு.எஸ். சிவமகாராசா பேசுகையில்:- சிறு வயதிலேயே மாணவர்களின் ஆற்றலை வளர்க்க இவ்வாறான மெய்வல்லுனர் போட்டிகள் உதவுமெனவும் இதன்மூலம் அவர்கள் பல நற்பண்புகளைக் கற்க முடியுமெனவும் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு. என். ஸ்ரீ புஷ்பநாதன் உட்பட பலர் உரையாற்றினர்.

திருமதி ஜெ. ஜெயக்குமார் பரிசில்களை வழங்கினர். (இ-68)

# ஆசிரிய மாணவருக்கு விடுமுறை காலத்தில் விசேஷ வகுப்புகள்

கடந்த வருடம் பலாலி, கோப்பாய் ஆகிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் இரண்டு வருட பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறிய ஆசிரிய மாணவர்களுக்கு இரண்டாம் தவணை விடுமுறையின் போது விசேஷ வகுப்புகள் நடத்தப்படும்.

கல்வி அமைச்சின் செயலாளர் திரு.ஈ.எல். விஜயமானே மேற்கண்டவாறு இரு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர்களையும் பணித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் தெரிவித்தார்.

கடந்தவருட இறுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இரண்டுமாதகால பயிற்சியும், பரீட்சையும் நடைபெறாத நிலையில் இந்த ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

இவர்கள் தமக்கு துரிதமீட்டல் வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்றும் தமக்குரிய பரீட்சைகள் பலாலி, கோப்பாய் ஆகிய ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலேயே நடத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இவர்களின் கோரிக்கையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சின் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தது.

இக்கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டே கல்வி அமைச்சின் செயலாளர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார். (இ - 5)

# பயிர் நோய்களைக் கண்டறிவதில் விவசாயத் திணைக்களக் குழு தீவிரம்

## கிராமம், கிராமமாகச் சென்று விவசாயிகளுடன் சந்திப்பு

மானிப்பாய் ஜூலை 31

பயிர்களுக்கான நோய்களையும் பீடைகளையும் கண்டறிந்து அவற்றுக்கேற்ற மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதில் யாழ்ப்பாண மாவட்ட விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. எஸ் ரி பத்மநாதன் தலைமையில் விவசாய திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இருபது பேர் கொண்ட குழுவினர் இதில் ஈடுபட்டுள்ளனர்.

நோய்கள் பற்றியும், அவற்றுக்கான காரணங்களை கண்டறியவும் இக்குழுவினர் யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு கிராமத்து விவசாயிகளையும் நேரில் சந்தித்து உரையாடி வருகின்றனர்.

சங்குவேலி, உடுவில், மானிப்பாய் கிராமங்களுக்கு இக் குழுவினர் வருகை தந்து தற்சமயம் வயல்களில் பயிரிடப்பட்டுள்ள வெங்காயம் போன்ற பயிர்களுக்கான நோய்களையும், பீடைகளைப்பற்றியும் அறிந்து கொண்டனர்.

சங்குவேலி வெளியில் உள்ள கமக்காரர்களை இக்குழுவினர் தனித்தனியே சந்தித்து உரையாடியதோடு அவர்களின் குறைபாடுகளையும் கேட்டறிந்து கொண்டனர்.

மானிப்பாய் - அட்டகிரிப் பகுதியில் விளைவிக்கப்படும் பொன்னாங்காணிப் பயிர்ச் செய்கையையும் இவர்கள் பார்வையிட்டதோடு அப்பகுதி விவசாயிகளை சந்தித்து பொன்னாங்காணி பயிர்ச்செய்கை பற்றியும் அவர்களின் குறைபாடுகளையும் அறிந்து கொண்டனர்.

உடுவில் கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியை திருமதி. ச. பத்மநாதன், இணுவில் விவசாய விஸ்தரிப்பு சேவை உத்தியோகத்தர் திரு. தர்மரத்தினம், மானிப்பாய் விவசாய விஸ்தரிப்பு சேவை உத்தியோகத்தர் திரு. கணேஷ் மற்றும் பயிர் செய்கை உத்தியோகத்தர்களும் மேற்படி குழுவினருடன் கலந்து கொண்டு சங்குவேலி - மானிப்பாய் விவசாய நிலங்களைப் பார்வையிட்டனர்.

மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு எஸ்.ரி.பத்மநாதன் தலைமையிலான குழுவினர் அச்சுவேலிப் பகுதிக்கும், அராலியில் உள்ள பம்பாய் வெங்காயப் பயிர் செய்கைப் பகுதிக்கும் அண்மையில் சென்று பார்வையிட்டு, அப்பகுதி விவசாயிகளையும்நேரடியாகச்சந்தித்து குறைபாடுகள் பற்றி உரையாடினர். (இ-90)

# வீதி திருத்தும் வேலை: புதிய முறை அறிமுகம்

## யாழ் ஆணையாளர் தகவல்

யாழ் மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீதிதிருத்த வேலைகள் புதிய முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் செலவும் மிச்சமாவதுடன் விரைவிலே திருத்த வேலைகளை மேற்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

இவ்வாறு யாழ்மாநகர சபை ஆணையாளர் திரு திரு சி. வி. கே. சிவஞானம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த முயற்சி தற்பொழுது பரீட்சார்த்தமாகவே மேற்கொள்ளப் பட்டுவந்தபோதிலும் பூரண வெற்றியை அளித்துள்ளது.

இதன்படி ஒரு குறிப்பிட்ட வெப்பத்தில் கல்லையும் தாரையும் சூடாக்கி தாருக்குள் கல்லைப் போட்டுக் குழைத்தெடுத்து அந்தக்கலவையைக் கொண்டே வீதிதிருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் செலவு குறைவதுடன் குறைந்தளவு தொழிலாளர்களைக் கொண்டு திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் இவ்வாறாகத் திருத்தப்பட்ட வீதிகள் நீண்ட நாட்களுக்கு பழுதடையாமல் இருக்குமென்றும் அவர் தெரிவித்தார். (ஒ-9)

## கூட்டம்

தீவுப் பகுதி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பனை அபிவிருத்தி நடவடிக்கை கொள்வனவு விற்பனவு நிலையம் ஒன்றை ஆரம்பிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஊர்காவற்றுறையில் நடைபெற்றது.

பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் திரு எஸ். பாலசிங்கம், ஊர்காற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். ஜீவரத்தினம், பனை அபிவிருத்திச் சபையின் தீவுப் பகுதி வெளிக்கள உத்தியோகத்தர் திரு. எஸ். குருபரராஜா ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். (இ-167)

# மாநகரசபை நடத்திய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ். மாநகரசபை நடத்திய 1988 ஆம் ஆண்டுக்கான ஆரோக்கியமான தாய்—சேய் தெரிவுப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கிடையேயான போட்டியில் வெற்றி பெற்றோர்: நிரோசன் பட்டாபிராம் சன்னதிட்டி, ஆன்ஜக்குலின் ரவிச்சந்திரன் ஈச்சமோட்டை, ஜெலிவினோத் லோறன்ஸ் பாஷையூர், சுமித்தன் றக்கா வீதி, விஜிகாந்தன் நடேசன் கலைமகள் வீதி, உஸ்யந்தன் சிவராசா நெடுங்குளம் வீதி, கே. காயத்திரி சின்ன வடக்கு வீதி, எஸ் சயீருஸ் பொம்மைவெளி

ஒரு வயதுக்கும் இரண்டு வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளில் வெற்றி பெற்றோர்:

கலாராஜ் லிங்கேஸ்வரன் ஆனைப்பந்தி. பிரபாகரன் மொமிலைக் யோசேப் தொடர்மாடி, மடத்தடி சத்தியன் செல்வரத்தினம் வைரவர் கோவில் வீதி, அரியாலை. நிசாந்தன் புது வீதி. சிந்துஜன் ஜோசேஸ்வரன் நல்லூர் சயல்விழி ஈஸ்வரன் கொழும்புத்துறை. கே. நிருஜா ஓட்டுமடம், செலன் நிமானி அல்பிரட் நாவாந்துறை.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போட்டியில் வெற்றி பெற்றோர்:-

யோகேஸ்வரி யோகலிங்கம் அரசடி. லூரியா அன்ரன் கொட்டடி, கோணேஸ்வரி புவனேந்திரராஜா அரியாலை, மரிய செபமாலை சகாயம் பாஷையூர், ஜெயந்தி ஜெகநாதன் நாயன்மார் வீதி, பொன்மலர் பேனடிற் நெடுங்குளம் கமலினி லாஸ் ண்ணபுரம், தனலட்சுமி குணரத்தினம் வண்ணார் பண்ணை, மரியரத்தினம் அன்ரனதாஸ் பொம்மைவெளி, இருநயமூர்த்தி லூர்த்துநாயகம் பொம்மைவெளி. (இ- -5)

# வீடமைப்புத் திட்டம் அடிமட்டத்திலிருந்து நடைமுறை

செவன வீடமைப்புத் திட்டம் அடிமட்டத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக வேபொது ஜன அபிப்பிராயங்களைத் திரட்ட பொது அமைப்புப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை மேற்கொள்கிறோம்

வலி- வடக்கு பிரதேசசபை விசேஷ ஆணையாளர் திரு பொ. பாலசிங்கம் இப்படிக் கூறினார்

வலி- வடக்கு பிரதேசசபை எல்லைக்குள் ஒதுக்கப்பட்டுள்ள செவன திட்டத்தின் கீழான 147 வீடுகளை அமைப்பது சம்பந்தமான பொது அமைப்பு பிரதிநிதிகள் கொண்ட விசேஷ கூட்டம் ஒன்று பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

அதற்கு தலைமை வகித்துப் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''இவ்வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சகலரும் பயன்பெறும் வகையில் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட வேண்டும். சகல பொது ஜன அமைப்புப் பிரதிநிதிகளும் இதற்கு உதவவேண்டியது அவசியம். சகலரும் தம் ஆலோசனைகளைத் தெரிவிக்கவேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

பதிவாளர் திரு. எம். செல்வராசா, வலி-வடக்கு பிரஜைகள் குழுக்களின் ஒன்றியத் தலைவர் திரு. வி. எஸ். கணேசலிங்கம், அருட் திரு பீட்டர் துரைரத்தினம் எல். ஆர். எஸ். எஸ் அமைப்புப் பிரதிநிதி திரு. சே. மார்க் ண்டேயர், வீடமைப்பு அதிகாரசபைப் பிரதிநிதி திரு. எம் இராசேந்திரம் உட்படப் பலர் ஆலோசனை வழங்கினார்கள்.

கிராம சேவையாளர்கள் தத்தம் பகுதி பொதுஜன அமைப்பு பிரதிநிதிகளைக் கூட்டி ஆலோசனை செய்து பட்டியல் தயரித்து இம்மாத முடிவில் சமர்ப்பிக்க வேண்டும் என தீர்மானிக்கப் பட்டது. (இ-68)

# உதைபந்தாட்டமும் மென்பந்து கிரிக்கெட்டும்

## வெள்ளிவிழாவை முன்னிட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 31

கொக்குவில் வளர்மதி முன்னேற்றச்சங்கமும், சனசமூக நிலையமும் தமது வெள்ளிவிழாவை முன்னிட்டு உதைபந்தாட்ட, மென்பந்து கிரிக்கெட் போட்டிகளை நடத்துகின்றன.

அணிக்கு ஏழு பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டப் போட்டியும்—

ஏழுபேர் பங்குகொள்ளும் 12 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியும்—

இந்த வெள்ளி விழாவை முன்னிட்டு நடத்தப்படுகின்றன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அணிகள் மேற்படி கழக விளையாட்டுப் பொறுப்பாளருக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம். (ஒ - க)

# சேதமடைந்த தபால் பெட்டிகள்

## திருத்தப்படவில்லை

காங்கேசன்துறை, ஜூலை 31

வலி வடக்குப் பகுதியில் கடந்த கால வன்செயல்களால் நூற்றுக்கும் மேற்பட்ட தபால் பெட்டிகள் சேதமடைந்து உபயோகிக்க முடியாத நிலையில் இருப்பதால் பொது மக்கள் தபால்களை சேர்க்க முடியாமல் கஷ்டமுறுகின்றனர்.

வலி வடக்கில் பல இடங்களிலும் தபால் பெட்டிகள் இன்னமும் உடைந்த நிலையிலும், சேத முற்றும் காணப்படுகின்றன.

இதனால் பொது மக்கள் தபால்களை சேர்க்க தபால் நிலையங்களையே நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (இ-68)

# சந்தையில் பணம் திருட்டு

பண்டத்தரிப்பு, ஜூலை31

பண்டத்தரிப்பு சந்தையில் ஒரு வியாபாரியின் ஷேர்ட் பொக்கற்றில் இருந்து 3 ஆயிரத்து 500 ரூபா திருடப்பட்டது. (இ-120)

# சுவரொட்டிகள் அகற்றப்பட்டன

வடமராட்சி, ஜூலை31


பருத்தித் துறையில் ஒட்டப்பட்டிருந்த - இறந்த போராளிகளின் நினைவுச் சுவரொட்டிகளை அமைதிப்படையினர் அகற்றிவருகின்றனர்.

பருத்தித்துறை வேலாயுதம் பாடசாலைக் கட்டடத்தில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளும் அகற்றப்பட்டுள்ளன (ஒ-160)

COMPUTERIZED PROCESSING & PRINTING A 135 COLOUR ROLL
P.C PRINTS - 4-00
PROCESSING
Free 8x10
COLOMBO studio, Jaffna

டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

Grant BJK&E PFL 1157

தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லி.

Pfizer

சில்லறை விலை ரூ. 39/90 200 மி. லி.

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

ஈழத்திலும்

சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

- பகவான் சத்தியசாயிபாபா நேரடிதரிசனம்
- தென்னிந்திய புனித ஸ்தல யாத்திரை
- நம்பிக்கையான (CANADA) பயண ஒழுங்கு

மேலதிக விபரத்திற்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரிகள்:

கிளை: 24/11 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

தலைமையகம்: 33, 1ஆவது மாடி, புதிய ஜெமினி கொம்பிளக்ஸ் சென்னை - 6

தொலைபேசி: 475382

* குறிப்பு: தென்னிந்திய புனித ஸ்தல யாத்திரை 10. 8. 88 ஆரம்பம்

(C 5710)

இதோ! உங்கள் பிரபல்ய போஷாக்கு நிறைந்த

லீடா

முழு ஆடைப்பால்மா

வசதியான பக்கட்களில்




விநியோகஸ்தர்கள்,
மில்லர்ஸ் லிமிடெட்
த. பெ. இல: 100, கொழும்பு - 1

400 கிராம் பக்கட் ரூ. 29/90
1 கி. கிராம் பக்கட் ரூ. 85/=
2 கி. கிராம் பக்கட் ரூ. 162/=

IMAGE

லீடா இப்பொழுது ஓர்குடும்பத்தின் அங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுப் பாவனைக்கேற்ற முறையில்
பைக்கட்டுகளில் வறுத்து அரைத்த
அண்ணா மிளகாய்த் தூள்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளுங்கள்.
அண்ணா கோப்பிக் கடை
யாழ்ப்பாணம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

# உதயன்

31 - 07 - 1988 ஞாயிற்றுக்கிழமை

பற்களுக்கு வெண்மையும் உறுதியும்
கொடுப்பது
அண்ணா பற்பொடி
அண்ணா பற்பொடி தற்பொழுது மக்களின்
வசதிக்கேற்ப 100 g. பக்கட்டுகளிலும்
வெளிவருகின்றது!
100 g வெற்றுப் பைக்கட்டுகளைச்
சேர்த்துக் கொடுத்து
இனாம் பொருட்களைப் பெற்றுக்
கொள்ளுங்கள்.

இந்திய அரசுக்கு இலங்கை அளித்துள்ள உறுதி

## மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரம்

## அவற்றுக்கான தேர்தல் முடிந்தபின்னரே

கொழும்பு, ஜூலை 31
சகல மாகாணசபைக ளுக்கும் தேர்தல்கள் நடைபெற்று முடிந்த பிறகு அவற்றுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படும். எல்லாத் தேர்தல்களும் நடைபெற்று முடிந்த பிறகு இதற்குத் தேவையான மாறுதல்கள் சட்டத்தில் கொண்டுவரப்படும் என்று இலங்கை அரசு, இந்தியாவுக்கு உறுதி அளித்துள்ளது.

வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் கடந்த வியாழன் ராஜ்யசபாவில் சமர்ப்பித்த எழுத்துமூலமான பதிலில் முன் கண்ட தகவலை வெளியிட்டார்.

ஆலடி அருணா (அ.தி.மு.க ஜானகி அணி) கேட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் நட்வர்சிங் பதிலளித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தல்கள் இதுவரை நடைபெறவில்லை என்பது தெரிந்ததே.

திரு. நட்வர்சிங் மேலும் சொன்னதாவது:-

வடக்கு, கிழக்கு இணைப்புக்கு இலங்கை அரசு இணங்கியுள்ளது. இதைப் பலதடவைகள் இலங்கை அரசு உறுதி செய்தது. கடந்த ஜூன் 30 ஆம் திகதி ஜனாதிபதி ஜெயவர்த்தன இதனை அறிக்கை ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தி இருக்கிறார்.

ஊர்காவல் படையினரிடமிருந்து ஆயுதங்கள் அகற்றப்பட்டு விட்டன. கிழக்கில் இருந்து விசேட அதிரடிப் பொலீஸ்படை வாபஸ் பெறப்பட்டு விட்டது. ஆயுதங்களை ஒப்படைக்கும் போராளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்க இலங்கை அரசு முன்வந்துள்ளது. காவலில் வைக்கப்பட்டிருந்த சுமார் 3 ஆயிரத்து 600 பேர் விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

இப்படி இணை அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்தார்.

(உ-எ)

G.C.E. O/L
DAY CLASS &
EVENING CLASS
ஆண்டு 11 Eevening Class
விஞ்ஞானம் - திரு. Bond.
திரு. கதிர்.
கணிதம் - திரு. தனரட்ணம்.
தமிழ் - திரு. சுந்தரலிங்கம்.
சமூகக்கல்வி - திரு. ஜேசுதாஸ்.
ஆங்கிலம் - திரு. ஜெயக்குமார்.
வர்த்தகம் - திரு. துரை.
சுகாதாரம் - திரு. ராஜ்-தேவ்.
ஆண்டு - 11 - ஒட்படை வாராந்த மதிப்பீட்டிற்குரிய பயிற்சிப் பரீட்சை+ அதற்கான கருத்தரங்குகளும், எமது கல்வி நிறுவனத்தில், கல்வி கற்காத வெளி மாணவர்களுக்கும் இலவசம்.
ஒப்படை பொறுப்பாளர்- திரு. ராஜ்-தேவ்.
புதியபிரிவுகள் ஆரம்பம்: 01-08-1988
மேலதிக விபரங்கட்கு, பதிவாளர்
Bond Institution,
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C5973)

31 ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்:
4-11-1922

மறைவு:
1-7-1988

திருமதி கமலேஸ்வரி பாலசுந்தரம்

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்மையெல்லாம் வளர்த்து வையகத்தில் நற் பிரஜைகளாய் உலாவவிட்ட அன்புத்தெய்வமே, எம் வாழ்வில் ஒளி விளக்காய் ஒளி தந்து இறைவனடி சேர்ந்து விட்ட உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், சகோதரர்கள்.
261/8, கொழும்புத்துறை, வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(5403)

## தென் இலங்கையில் வன்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
முறை வெடிக்கலாம் என எதிர்பார்த்து பாரிய அளவில் பந்தோபஸ்து முன்னேற்பாடுகளை இலங்கை அரசு மேற்கொண்டிருந்தது என்பதும் தெரிந்ததே.

அரசாங்கத்தின் தீவிர பந்தோபஸ்து ஏற்பாடுகளுக்கு மத்தியிலும் வன்முறை கட்ட விழ்ந்து விடப்பட்டது.

அரசுக் கட்டடங்களுக்குக் குண்டுகள் வீசப்பட்டன.

வீதிகளுக்குக் குறுக்கே மரங்கள் வெட்டிப் போடப்பட்டு போக்குவரத்துத் தடுக்கப்பட்டது.

அரசுக்குச் சொந்தமான 13 பஸ்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

வன்செயலில் ஈடுபட்டிருந்த ஜே. வி. பி. தீவிரவாதிகளுடன் அரசாங்கப் படையினர் மோதிய போது பல தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

ரயில் தண்டவாளத்துக்கு குண்டு வைத்துக் கொண்டிருந்த ஒருவர் திடீரென அக்குண்டு வெடித்ததினால் அந்த இடத்திலேயே உடல் சிதறி மாண்டார்.

கரந்தெனியாவில் ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்த மூன்று பேர் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இயக்கத்தின் முக்கிய தலைவர் என்று கருதப்படும் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வீரக்கெட்டியா, பெலியத்த ஆகிய இடங்களில் இரண்டு ஜே. வி. பி. யினர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து இரண்டு ''ஷொட் கன்கள்'' மீட்கப்பட்டன.

இன்னொரு தீவிரவாத சந்தேக நபர் மாத்தளையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று வெலகெதர என்னும் இடத்தில் அரசு பஸ் ஒன்றுக்கு தீ வைத்த கும்பல் ஒன்றின் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது ஒரு தீவிரவாதி உயிரிழந்தார்.

கொடகம, கலகெதர, நுவரெலியா, கண்டி, கேகாலை ஆகிய இடங்களில் பஸ்களுக்குத் தீ வைக்கப் பட்டன.

மத்துகமவில் பஸ் தரிப்பு நிலையம் ஒன்றில் நின்று கொண்டிருந்த பொதுமக்கள் மீது கைக்குண்டு வீசப்பட்டது. அதில் நான்கு பொது மக்கள் காயமடைந்தனர்.

இரத்மலானை காலி வீதியில் மலிபன் சந்தியில் பஸ் ஒன்றில் வந்திறங்கிய நபர் ஒருபர் கைக்குண்டு ஒன்றை எறிந்த போது இருவர் காயமுற்றனர்.

திஸ்ஸ மஹாராமவில் ஜே. வி. பி. தீவிரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரிடமிருந்து ரி. 56 ரக ரைபிள் ஒன்றும் மீட்கப்பட்டது.

தென்மாகாணத்தில் மின் விநியோகம், தண்ணீர் விநியோகம் ஆகியவை சீர்குலைத்தன என்றும் அறிவிக்கப்பட்டது.

தீவிரவாதிகள் இச் சேவைகளைச் சீர்குலைத்தனர் என்றும் மீண்டும் மின், தண்ணீர் விநியோகத்தை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்தனர் என்றும் தென்மாகாண முதலமைச்சர் எம்.எஸ். அமரசிறி தெரிவித்தார்.

ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது ஜே. வி. பி.யினர் மறைந்து இருந்து தாக்கியதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

தென் மாகாணத்தில் அங்குனலப்பெலஸ என்னுமிடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது:

உயிரிழந்த சிப்பாயின் பெயர் பி. ஏ. எஸ். ஆனந்த. கெமுனு படையின் முதலாவது பிரிவைச் சேர்ந்தவர் இவர்.

வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷனில் இவர் தீவிரப் பங்கெடுத்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு உட்பட பெரும்பாலான இடங்களில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை. பெரும்பாலான அரசு ஊழியர் அலுவலகங்களுக்குச் செல்லவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. (உ-எ)

### காலவரை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஏ. எஸ். கல்கத் யாழ்குடா நாட்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பந்தோபஸ்து நடவடிக்கைகளை கடந்த வியாழக்கிழமை காலையில் சுற்றிப் பார்வையிட்டார்.

அதையடுத்தே வடக்கில் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

### தென்னிலங்--

மாவட்டங்களில் இன்று காலை 6 மணிக்குதளர்த்தப்படும் ஊரடங்கு மீண்டும் இன்றிரவு7 மணி முதல், நாளை காலை 4 மணிக்கு வரை அமுல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில்

## ஆளுநர் ஆட்சி நீடிப்பு குறித்து மந்திரி விளக்கம்

தமிழகத்தில் அமைதியான முறையில் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதனால்தான் ஆளுநர் ஆட்சி நீடிக்கப்படுகிறது

இப்படி உள்துறை அமைச்சர் பூட்டாசிங் கடந்த வியாழக்கிழமை லோகசபையில் தெரிவித்தார்.

தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி நீடிப்புப் பிரேரணையைச் சமர்ப்பித்து அமைச்சர் பேசுகையில் இதனை வெளியிட்டார்.

''வன்னியர் சங்கம் தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளது. இந்த நிலையில் தேர்தலை நடத்தினால் வன்செயல்கள் இடம்பெறலாம்'' என்றும் திரு. பூட்டாசிங் தெரிவித்தார்.

இணை அமைச்சர் ப. சிதம்பரம் இதனை ஆதரித்தார்.

இதேவேளை தமிழ் நாட்டில் ஆளுநர் ஆட்சியை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கச் செய்யும் பிரேரணை வியாழனன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

வாக்களிப்பின்போது எதிர்க்கட்சி எம் பிக்கள் வெளிநடப்புச் செய்தனர்.

### போர்,..

[1 ம்பக்கத் தொடர்ச்சி]
ருந்தது.

அப்போது கனடாக் கரையை நோக்கி வந்து கொண்டிருந்த வேறு இரண்டு சோவியத் குண்டு வீச்சு விமானங்களை இடைமறிப்பதற்காக அமெரிக்கா மற்றும் கனடாவுக்குச் சொந்தமான இரண்டு போர் விமானங்கள் அப்பகுதியை நோக்கி விரைந்து வந்தன.

இவ் விமானங்களுக்கு இடையில் சில அடிகள் வித்தியாசத்தில் டி. வி பயணிகள் விமானம் சிக்கிக்கொண்டது.

பயணிகள் விமானத்தின் ஓட்டி, போர் விமானங்களுடன் தனது விமானம் மோதாமல் தவிர்த்துக்கொள்வதற்காக துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமது விமானத்தைக் காப்பாற்றினார்.

சோவியத் போர் விமானங்கள் கனடா எல்லையில் காணப்படுவதும் அவற்றை இடைமறிக்க அமெரிக்க மற்றும் கனடா போர் விமானங்கள் செல்வதும் அடிக்கடி இடம்பெற்று வருகின்றன.

-இப்படி கனடா விமானப்போக்குவரத்து பிரிவு தெரிவித்துள்ளது.

(உ-எ)

### புதிய----

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வித்தார்.

மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசாங்கத்தை வன்செயல்கள் மூலம் கவிழ்ப்பதற்கு நான் ஜனாதிபதியாக இருக்கும்வரை அனுமதிக்கப்போவது இல்லை -இப்படி திரு. ஜெயவர்த்தன மேலும் தெரிவித்தார்.

(உ-எ)

வெளிநிலைப்
பல்கலைக் கழகக் கல்வி
B.A 1988 டிசம்பர்
மீட்டல் - வினவிடை வகுப்பு
பொருளியல்:- வரதராஜன்
தமிழ்:- குழந்தை
அரசறிவியல்:- தம்பி
ஆரம்பம்: 03-08-88
புதன் — 8.00 A.M.
BECON
156/3, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.
(C-5971)

### பெரியண்ணன்
### நாராயணசாமி (N. S.)

மல்லாகத்தைச் சேர்ந்த பெரியண்ணன் நாராயணசாமி (N. S) அகால மரணமடைந்தார். இவர் காலஞ்சென்ற வத்தேகம பெரியண்ணன் திருமதி பெரியண்ணனின் மகனும், கௌரியின் அன்புக் கணவரும், திருவேணியின் (உடுவில் மகளிர் கல்லூரி மாணவி) பாசமுள்ள தந்தையும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் மயில்வாகனம் திருமதி தையல்நாயகியின் மருமகனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் வியாழக்கிழமை 28 – 07 – 88 மல்லாகத்தில் நடைபெற்றதென்பதை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
பொ. சோமசேகரன்.
(5557)

## மரண அறிவித்தல்கள்

### திரு. இராசையா
### அசோக் இளமுருகன்

Mr. Ashok E. Rasiah,
(Old Boy of Jaffna C-ntral College)

கொட்டடி காலஞ்சென்ற புறக்டர் இராசையாவினதும் திருமதி நேசமணி இராசையாவினதும் அன்புமகனான அசோக் இளமுருகன் லண்டனில் அகால மரணமானார். இவர் சாவித்திரி, பரிமேலழகன் (லண்டன்) நித்தியானந்தன் (கணக்காளர் இ. போ. ச. கோண்டாவில்) ஸ்ரீரங்கன் (கணக்காளர்-கல்வித்திணைக்களம், மட்டக்களப்பு) ஜனகன்(ஜேர்மனி) சத்தியபாமா, ஜெயராணி, ஜனக்குமார் (Rosa Jewellers) சிவகுமாரி, விஜயகுமாரி அவர்களின் அன்புச் சகோதரரும், சபானந்தன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) வசந்தி(லண்டன்) ஜமுனாகுமாரி (இ போ. ச. கோண்டாவில்) இந்திரா, ஸ்ரீ தயக்குமார் (மட்டக்களப்பு) ஸ்ரீநிவாசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் நாளை திங்கள்1-8-1988 இல் லண்டனில் நடைபெறும்.

தகவல்:
இ. நித்தியானந்தன்
154, கன்னாதிட்டி ரோட்,
யாழ்ப்பாணம்.
(5296)

### திருமதி வைரமுத்து நாகம்மா

புங்குடுதீவு கிழக்கு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி வைரமுத்து நாகம்மா அவர்கள் காலம் கிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து அவர்களின் அன்பு மனைவியும்- காலஞ்சென்ற திரு திருமதி கந்தையா வள்ளியம்மை அவர்களின் அருமை மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி சின்னையா முத்துப்பிள்ளை ஆகியோரின் பிரிய மருமகளும், பத்மலோஜனி, சிவலிங்கநாதன் (ஜேர்மனி), கமலாதேவி, கணேசமூர்த்தி, வில்வரெத்தினம், திருநாவுக்கரசு (வரிமதிப்பீட்டாளர் – வருமானவரித் திணைக்களம். கொழும்பு) சிவானந்தலோஜனி ஆகியோரின் அருமைத் தாயாரும், மன்னார் ஆத்திமோட்டை அரசினர் தமிழ் வித்தியாலய அதிபர் சிவசாமி தெய்வநாயகி, ஞானவடிவேல் (வர்த்தகர், மருதானை.) விஜயலெட்சுமி, சுந்தரவதனி, நகுலேஸ்வரி, சிவநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற முத்தம்மா, அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற லெட்சுமி, காலஞ்சென்ற அப்புத்துரை, நடராசா ஆகியோரின் பிரிய சகோதரியும், காலஞ்சென்ற சிவகுரு, காலஞ்சென்ற சின்னத்தம்பியின் மைத்துனியும், ஆறுமுகம், காலஞ்சென்ற நாகலிங்கம், காலஞ்சென்ற கார்த்திகேசு, சரசலெட்சுமி ஆகியோரின் மைத்துனியும், நவமணியின் சகலியுமாவார்.

மரணச் சடங்குகள் அன்னார் இல்லமாகிய புங்குடுதீவு கிழக்கு ''சித்ராலயாவில்'' நடைபெற்று மணற் காடு மயானத்துக்குத் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
வை. வில்வரெத்தினம்.
(5413)
28-07-88

### சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை

நவக்கிரியை பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சின்னத்துரை (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) அவர்கள் 28-07-1988 வியாழக்கிழமை காலமானார். அன்னார் பொன்மலரின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், வசுமதி (ஆசிரியை யா/கைதடி முத்துக்குமாரசாமி ம. வி.), டாக்டர் இந்துமதி (யாழ் வைத்தியசாலை) பிரபாகரன் (பொறியியலாளர், U. S.A.)கிருபாகரன், ஸ்ரீகரன் (வைத்தியபீட மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், முத்துக்குமாரசாமி (அதிபர், யா/ நாவற்குழி ம. வி.) டாக்டர் ஸ்ரீஸ்கந்தராசா (உதவி விரிவுரையாளர் யாழ். மருத்துவத்துறை) துக்கா (ஆசிரியை, பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்ஷ்மன், டிலக்ஷன், தர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும், சரஸ்வதி, சிவக்கொடி, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா, நவரட்ணம் ஆகியோரின் மைத்துனருமாவர். அன்னாரின் இறுதிச் சடங்கு அம்பலவாணர் பாதை, திருநெல்வேலியில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

28-07-88
தகவல்
ந. முத்துக்குமாரசாமி
(5416)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 31 - 07 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Sunday 31st July 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org